பக்கங்கள்: பன்னிரண்டு

gistered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா.7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | சித்திரை 20 | ஞாயிற்றுக்கிழமை | (02-05-2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 135

புதுப்பொலிவுடன் திருநெல்வேலியில்
WESTERN UNION பணப் பரிமாற்றம்
♦ விரைவானது ♦ பாதுகாப்பானது ♦ நம்பகமானது
இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிக துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு
☞ பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத் தேவையில்லை
☞ வங்கிக்கணக்கு அவசியமில்லை
☞ நீடிக்கப்பட்ட சேவை நேரம்
☞ 365 நாள் சேவை
☞ 10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்
THIRUMURUGAN COM NET
T.P. 021 222 7310
021 222 7555
021 222 7560
Fax 021 222 7310
E-mail: thirumurugan@eudoramail.com
46, ஆடியபாதம் வீதி, (ப.நோ.கூ.ச.முன்பாக) திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

## தமிழ்த் தேசியத்தின் அறைகூவலாக யாழ்ப்பாணத்தில் மே தினம் ஒலித்தது!

(அலுவலக நிருபர்கள்)

தமிழ் தேசியத்தை வலியுறுத்தும் மாபெரும் எழுச்சி நிகழ்வாக நேற்றைய மே தின நிகழ்வுகள் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் எழுச்சி பூர்வமாக இடம்பெற்றன.

யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் சமாசத் தலைவர் க. சூரியகுமார் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பொதுச் சுடரினை விடுதலைப் புலிகளின் தென்மராட்சி கோட்டப் பொறுப்பாளர் கலைவாணன் ஏற்றி வைக்க தமிழீழத் தேசியக் கொடியினை யாழ். பிரதேச பொறுப்பாளர் செழியன் ஏற்றி வைத்தார்.

மேதினப் பிரகடனத்தை யாழ். மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் ப. கனகலிங்கம் வெளியிட்டார்.

ஆசியுரைகளை பிரம்ம ஸ்ரீ கா. சந்திரசேகரசர்மா, அருட்திரு. எஸ். ஜெயக்குமார், மௌலவி. எம். மகீர ஆகியோர் வழங்கினர்.

தொழிற்சங்க பிரதிநிதிகள் மற்றும் கூட்டுறவாளர்கள் எனப் பெரும் திரளானோர் கலந்து கொண்ட இந் நிகழ்வில் விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், தொழிற்சங்க பிரதிநிதிகள் என பலர் உரையாற்றினர்.

(இ. 43,61)

## கிளைமோர் வெடித்ததில் போராளி ஒருவர் பலி

### மட்டக்களப்பில் சம்பவம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் இராணுவக் கட்டுபாடற்ற விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நேற்று நணபகல் இடம்பெற்ற கிளைமோர் கணணி வெடிச்சம்பவத்தில் ஜெயந்தன் படையணியைச் சேர்நத போராளி ஒருவர் கொல்லப் பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பு கிரான் பாலத்திற்கு அப்பால் உள்ள பெண்டுகள் சேனைப் பகுதியில் இடம்பெற்ற இக் கிளைமோர் வெடிச் சம்பவத்தில் நேசராசா என்னும் விடுதலைப் புலிப்போராளியே கொல்லப் பட்டவர் என தெரியவந்துள்ளது.

இது இவ்வாறிருக்க குறிப்பிட்ட இச் சம்பவம் தொடர்பாக மட்டு. அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் கருத்துத் தெரிவிக்கையில் இச் சம்பவம் தற்செயலாக இடம்பெற்ற விபத்துச் சம்பவம் ஏன்று கூறினார்.

(ம)

## நோர்வேயின் சமாதானக்குழு இலங்கை வருகை

# அரசு – புலிகள் பேச்சுக்கு நோர்வே உதவ வேண்டும்

### ஹெல்கீசனிடம் பிரதமர் மகிந்த கோரிக்கை



### லக்ஷ்மன் கதிர்காமர் அமெரிக்கா செல்வார்

(கொழும்பு)

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இம்மாதம் 12ம் திகதி அமெரிக்காவுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

அமெரிக்கா செல்லும் கதிர்காமர் வெளிவிவகார அமைச்சர் கொலின் பவலையும் மற்றும் அமெரிக்க அதிகாரிகளையும் சந்திப்பார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு பதவியேற்றகையோடு இந்தியாவிற்கு விஜயம் செய்து இனப்பிரச்சினை தொடர்பாக பேச்சுக்களை நடத்திய வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், அமெரிக்கா செல்வது முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

(வ)

(நமது நிருபர்)

**இடைநிறுத்தப்பட்டுள்ள அரசு-புலிகள் சமாதான பேச்சுவார்த்தைகளை விரைவில் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசனிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**



கடந்த ஒருவருட காலமாக இடைநிறுத்தப்பட்டிருந்த சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு தொடர்ந்தும் ஏற்பாட்டாளராக பணிபுரியுமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நோர்வே அரசிற்கு விடுத்த அழைப்பை ஏற்று நேற்று இலங்கை வந்திருந்த நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசனிடம் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இலங்கை வந்த நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் பிரதமர் மகிந்த ராஜ பக்ஷவை அலரி மாளிகையில் சந்தித்து சுமார் ஒரு மணித்தியாலம்வரை கலந்துரையாடினார்.

இக் கலந்துரையாடலின் போது பிரதமர் கருத்துத் தெரிவிக் கையில்,

ஐக்கிய தேசிய முன்னணியின் ஆட்சிக காலத்தில் இடை நிறுத்தப்பட்டிருந்த சமாதான பேச்சுவார்த்தைகளை தற்போது உடனடியாக ஆரம்பிக்க வேண்டியுள்ளது. இதற்கு வேண்டிய சகல ஏற்பாடுகளையும் நோர்வே அரசு மேற்கொள்ள வேண்டும் என்பதே ஜனாதிபதியின் விருப்பமாகும். இதேபோல் கடந்த கால யுத்த அனர்த்தங்களினால் முற்றாகச் சேதம் அடைந்துள்ள வடக்கு-கிழக்கு பகுதிகளில் புனர்வாழ்வு நடவடிக்கைகளையும் துரிதமாக ஆரம்பிக்க வேண்டியுள்ளது இதற்கான கடன் உதவிக்ளை உலக நாடுகளில் இருந்து பெற்றுக் கொள்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளையும், நோர்வே அரசு மேற்கொள்ள வேண்டும் எனவும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ விடார் ஹெல்கசனிடம் கேட்டுக் கொண்டார்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசிடம் விடுதலைப் புலிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால சபை யோசனைகளை தொடர்ந்து ஏற்பட்ட அரசியல் நெருக்கடிகளினால் சமாதான பேச்சுவார்த்தைகள இடை நிறுத்தப்பட்டிருப்பதுடன் நோர்வே அரசும் தனது ஏற்பாட்டாளர் பணியில் இருந்து தற்காலிகமாக விலகிக் கொண்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(ம)

## ஜனாதிபதி சந்திரிகாவை ரணில் சந்தித்துப் பேச்சு

(கொழும்பு)

நுவரெலியா கந்தப்பொல பகுதியில் கடந்த புதன் இரவு இரு குழுக்களுக்கிடையே இடம் பெற்ற மோதல் சம்பவம் குறித்து சகல விசாரணைகளையும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரே மேற்கொளள் வேண்டும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா உத்தரவிட்டுள்ளார்.

நுவரெலியா கந்தப்பொல பகுதியில் இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பாக எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை ஜனாதிபதி மாளிகையில் நேற்று சந்தித்து கலந்துரையாடினார்.

நேற்றைய ஜனாதிபதி - ரணில் சந்திப்பு தொடர்பாக ஜனாதிபதி செயலகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

கந்தப்பொல பகுதியில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் போது உயிர் இழந்த இருவரின் குடும்பங்களுக்கும் தலா ஒரு லட்சம் ரூபா நட்டஈடாக வழங்க அரசு தீர்மானித்துள்ளது. துப்பாக்

(12ம் பக்கம் பார்க்க)

## ஊழல்களை விசாரிக்க விசேட அதிகாரம் கொண்ட குழு

### ஜனாதிபதி நடவடிக்கை

(கொழும்பு)

மோசடிகளையும், ஊழல்களையும் விசாரனை செய்வதென விசேட அதிகாரம் கொண்ட குழு ஒன்றை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா விரைவில் அமைக்கவுள்ளார். இக்குழு நேரடியாக ஜனாதிபதியின் நெறிப்படுத்தலிலேயே செயற்படும்.

புதிய அமைச்சுச் செயலாளர்களை தனது மாளிகையில் கடந்த வெள்ளியன்று சந்தித்த ஜனாதிபதி அரச துறைகளால் மக்கள் பெருமளவு ஏமாற்றம் அடைந்துள்ளனர். இதற்கு லஞ்ச ஊழல் ஆணைக் குழு இயங்காமையே காரணம் என்று தெரிவித்தார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி எம்.பிகளுக்கு தான் விதித்த கட்டுப்பாட்டு விதிகள் அமைச்சு செயலாளர்களுக்கும் பொருந்தும் என்றார். புதிய அரசாங்கம் திஸ்ஸ தேவேந்திர சம்பள ஆணைக்குழுவின் சிபார்சுகளை விரைவில் அமுல்படுத்த இருக்கின்றது என்றும் அதன் மூலமே அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வை வழங்க முடியும் என்றும் கூறினார். இதை விட அரசதுறை அதிகாரிகளுக்கு வீட்டுத் திட்டம் ஒன்றும் அமுல்

(12ம் பக்கம் பார்க்க)

## நோர்வே தூதுவர் ஹெல்கீசன் இன்று ஜனாதிபதியுடன் பேச்சு!

### சொல்ஹெய்ம் நாளை புலிகளுடன் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு வருகைதந்துள்ள நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹெல்கீசன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை இன்று சந்தித்துப்பேசவுள்ளார். ஜனாதபதியின் அழைப்பை ஏற்று இலங்கைக்கு வந்திருக்கும் அவர் அரசிறகும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதான பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாகவே இச் சந்திப்பின் போது ஆராயவுள்ளார்.

இதேவேளை நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சுப தமிழ்செல்வனை இவ் விஜயத்தின் போது சந்திததுப் பேசமாட்டார் என நோர்வே தூதரகம் அறிவித்துள்ளது.

முன்னர் திட்டமிட்டபடி நிகழ்வொன்றில் கலந்து கொள்வதற்காக இந்தோனேசியாவிற்கு செல்லவுள்ளதாலேயே ஹெல்கீசன் தமிழச் செல்வனை சந்திக்க மாட்டார் என நோர்வே தூதரகம் அறிவிதத்துள்ளது.

ஜனாதபதியுடனான சந்திப்பினை முடித்துக் கொண்டு விடார் ஹெல்கீசன் இந்தோனேசியாவிற்கு செல்லவுள்ளார்.

இதேவேளை விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை நோர்வேயின் விசேட தூதுவர் எரிச் சொல்ஹேம் தலைமையிலான குழுவினர் நாளை சந்தித்து பேசுவார்கள் என தெரிவிக்கப்படுகிறது.


(ச121)

# தமிழ்ச் சிறுவர்கள் மீது அரசுகள் காட்டும் பாரபட்ச, பாராமுகப் போக்கே அவர்களைப் போர் முனைக்குத் தூண்டுகிறது

## மன்னார் மறைமாவட்ட ஆயர் ஆணித்தரமான கருத்து

(மன்னார்)

தமிழ்ச் சிறுவர்களுக்கு அரசாங்கம் சரியான முறையில் வாய்ப்பு வசதிகளை வழங்கி, வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் நிதியுதவிகளை நாட்டின் அனைத்துச் சிறுவர்களின் உடல், உள வளர்ச்சிக்குப் பயன்படுத்தியிருந்தால், இந்தச் சிறுவர்கள் போராட்ட முனைக்குச் செல்லும் தேவையே எழுந்திராது. இவ்வாறு, லண்டன் ஐ.பி.சிக்கு வழங்கிய நேர்காணலில் மன்னார் மறைமாவட்ட ஆயர் அதிவண. இராயப்பு ஜோசப் அடிகளார் தெரிவித்துள்ளார்.



அவர் வழங்கிய நேர்காணலில் மேலும்,

இப்போது சிறுபான்மை அரசு அமைக்கப்பட்டிருக்கிறது என்பது உண்மை. ஆயினும் அதனுடைய எதிர்க்கட்சியாக இருக்கின்ற ஐக்கிய தேசியக் கட்சி ஒரு அரசாங்கத்தை ஏறபடுத்தக் கூடிய சூழலில் இப்போது இல்லை. ஆகவே இப்போது இருக்கிற அரசாங்கத்தைத் தான் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இது மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கம், ஆகவே மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கம் மக்களின் தேவையையே முத லில் பூர்த்தி செய்ய வேண்டும். அதாவது, சமாதானத்தைப் பற்றிய ஒரு நடவடிக்கையை அவர்கள் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும். எங்கே அந்த சமாதான முயற்சி விடப்பட்டதோ அதிலிருந்து அவர்கள் தொடர வேண்டும்.

ஜே.வி.பி. மாற்றுக்கொள்கை கொண்டதாக இருப்பது எல்லோரும் அறிந்த விடயம். நோர்வேயையும் அவர்கள் பணிசெய்ய விடவில்லை. வெளிநாட்டவர்களுடைய ஈடுபாடு இருக்கிறதென்று சொல்லியும், கிறிஸ்தவர்களுடைய ஈடுபாடு இருக்கிறதென்று சொல்லியும் தேவையற்ற காரணங்களைச் சொல்லி மக்களை ஏமாற்றியும் திசை திருப்பியும் வந்தார்கள். ஆனால் அவர்கள் இப்பொழுது பொறுப்பான இடத்திற்கு வந்திருக்கிறார்கள். ஒரு சமாதானத்தை செய்து நாட்டை முன்னேற்ற வேண்டுமென்கிற ஒரு ஸ்தானத்துக்கு அவர்கள் வந்திருக்கிறார்கள்.

ஆகவே இதற்கு முன்னர், தேர்தல் காலத்தில் சொல்லிவந்த அந்த பரப்புரைகளையும், மக்களை ஏமாற்றுவதற்காக சொல்லி வந்த பலவித காரணங்களையும் அவர்கள் தொடர்ந்தும் பெரிதாக எடுத்துக்கொண்டு, அதே நிலைப்பாட்டில் இருககாமல் அதிலிருந்து மாற்றம் பெற வேண்டும். நோர்வே இல்லாமல் இந்த அரசாங்கத்தால் சமாதானம் செய்ய முடியாது. அதுமட்டுமல்ல தமிழருக்கு சமவுரிமைய கொடுக்காமல் அவர்களுக்குத் தன்னாட்சி உரிமை கொடுக்காமல் ஒரு சமஷ்டி ஆட்சி கொடுக்காமல் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. அது நீதியின்படி செய்ய வேண்டிய காரியம் என்பதை அவர்கள் எப்பொழுது உணர்கிறார்களோ அன்றைக்குத்தான் இது சாத்தியமாகும்.

எங்களுடைய நிலைப்பாட்டின் படி விடுதலைப் புலிகள் தமிழ் மக்களினுடைய விடுதலைககாகப் போர் புரிகின்றவர்கள். ஆகவே நாங்கள் அவர்களை வேறு கண்ணோட்டத்தில் பார்க்கவில்லை. எங்களுடைய கண்ணோட்டத்தில், அவர்கள் எங்களுடைய விடுதலை வீரர்கள். விடுதலைக்காக தமிழ் மக்களை அழித்தொழித்து, தமிழினமே இங்கே இருக்கக்கூடாதென்று சொல்லி, அதை இருந்த இடம் தெரியாமல் திருப்பியனுப்பிவிட வேண்டும் அல்லது இந்தியாவுக்கு அனுப்பிவிட வேண்டும் அல்லது வேறெங்கும் அனுப்பிவிட வேண்டுமென்று கனவு கண்டவர்களுக்கு உண்மையான பதிலைச் சொல்லிக் கொண்டிருந்தவர்கள் விடுதலைப் புலிகள் தான்.

ஈழத்தமிழ் மக்களுடைய அபிலாஷைகளையும், உரிமைகளையும் தாங்கிச் செல்கின்றவர்கள் அவர்கள். எவ்வளவோ தியாகங்களுக்கும் மத்தியில் அவர்கள் இதை செய்து வருகின்றார்கள். ஆகவே இன்று விடுதலைப் புலிகளினுடைய குரலுக்கு மக்கள் செவிசாய்த்து அரசியல் ரீதியில் பாராளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கின்றார்கள்.

கதிர்காமர் வெளிநாட்டமைச்சராக இருக்கின்ற போதெல்லாம் சிறுவர்கள் விடுதலைப் புலிகளினால் கொண்டு செல்லப்படுகின்றார்கள் என்று கூறி, 'ஆடு நனைகிறது என்று ஓநாய் அழுதது' போல அவர்கள் பொய்ப்பிரசாரம் செய்தார்கள். ஆனால் அந்த மந்திரி எந்த விதத்திலும் ஒரு சிறிய தொரு காரியத்தையும் எங்களுடைய சிறுவர்களுக்கான கல்வி வளர்ச்சிக்காக அவர்களுடைய சமூக வளர்ச்சிக்காக செய்ததில்லை. அந்தச் சிறுவர்கள் இடம் பெயர்ந்து தாய், தகப்பனை இழந்து அநாதைகளாக்கப்பட்டு, கல்வியில்லாமல், வாழ்வில் ஒரு நம்பிக்கையில்லாமல் அனாதரவாக வாழ்கின்ற சூழலை அந்த மந்திரியோ அல்லது அரசாங்கமோ உணராமலும் அதுபற்றிப் பேசாமலும் இருப்பது வேதனையானது. இத்தகைய அனாதரவான சிறுவர்கள் பற்றி எந்த அக்கறையுமெடுக்காத அந்த மந்திரிக்கு, சிறுவர்கள் படையில் சேர்க்கப்படுவது பற்றிக் கதைப்பதற்கு உரிமையில்லையென்று நாங்கள் ஏற்கனவே தெரிவித்திருந்தோம்.

ஒலரா ஒட்டுணு என்பவர் ஐ.நா.விலிருந்து வந்தபோது நான் இந்தக் கருத்தை அவருக்குச் சொன்னேன். ஈழத்தமிழ் சிறுவர்களுக்கு எந்தவொரு முன்னேற்றத்தைத் தரும் செயற்பாட்டையும் முன்னெடுக்காத அரசாங்கத்தின் வெளிநாட்டு மந்திரி, இப்படி கதைப்பதற்கு அவர்களுக்கு என்ன உரிமை இருக்கிறது என்று நான் கேட்டேன். இன்றைக்கு முதலைக் கணணீர் வடிக்கிறவர்களுடைய கருத்துக்களுக்கு நாங்கள் அடிபணியப் போவதில்லை.

சிறுவர்கள் போராட்டத்தில் சேர்க்கப்படுவதென்பது தவிர்க்கப்படவேண்டியதொன்று என்ற நிலைப்பாட்டை நாங்கள் கடைப்பிடித்து வருகிறோம். உண்மையிலே அந்த சிறுவர்களுடைய வயதுக்கு தக்க மகிழ்ச்சியை அவர்கள் தங்களுடைய சொந்த வீடுகளிலிருந்து, அதன் பின்னணியிலிருந்து உரிய சுதந்திரத்தை அனுபவிக்க அந்தச் சிறுவர்களுக்கென்று எந்த வாய்ப்புமே வழங்கப்படவில்லை. போராட்டமென்பது பெரியவர்களால் தீர்மானிக்கப்பட்ட ஒன்று. 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் தீர்மானித்து செயல்படுகிற ஒரு காரியம் எனக் குறிப்பிட்டார். (உ)

## பிரதி சபாநாயகர் தெரிவில் தமக்கு அக்கறை இல்லையாம்!

### ஹெல உறுமய செயலர் தெரிவிப்பு

(கொழும்பு)

பிரதி சபாநாயகர் தெரிவில் யாருக்கு வாக்களிப்பது என தாம் இதுவரை தீர்மானிக்கவில்லையென ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பிரசாரச் செயலாளர் அத்துறலியே ரத்னதேரர் தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற கட்சியின் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எமது கட்சி பிரதி சபாநாயகர் பதவியில் அக்கறைகாட்டவில்லை. எதிர்வரும் 18ஆம் திகதி நடைபெறவுள்ள பிரதி சபாநாயகர் தெரிவில் நாம் போட்டியிடப் போவதாக வெளியாகிய செய்திகளை முற்றாக மறுக்கின்றோம்.

மேலும் நாம் யாருக்கு வாக்களிப்பது என இன்னமும் முடிவு செய்யவில்லை.தேர்தல் நடைபெறும் தினத்தன்று காலையே இதுபற்றி முடிவு செய்வோம்.

அத்துடன் எமது கட்சிக்குள் தேரர்களை மட்டுமன்றி சாதாரண பொதுமக்களையும் கட்சிகளின் பதவிகளுக்கு உள்ளீர்க்கத் தீர்மானித்துளளோம் என்றும் தேரர் தெரிவித்தார். (த-6)

## பெற்றோரை இழந்த 44 சிறார்க்கு நல உதவி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பகுதியில் பெற்றோரை இழந்த நிலையில் இருக்கின்ற 44 பிள்ளைகளுக்கு கோப்பாயில் உள்ள மக்கள் நலன் காக்கும் பிரிவு வாழ்க்கைக்கும், கல்விக்குமான உதவிகளை வழங்கிவருகின்றது என இந்த அமைப்பின் தலைவரான எஸ்.செல்லத்துரை தெரிவித்துள்ளார்.

அவர் இதுபற்றி மேலும் குறிப்பிடும்போது,

இத்திட்டத்தில் இணைத்துக கொள்ளப்பட்ட 30 சிறுவர்களுக்கான உதவிகளை கொழும்பில் உள்ள சிறுவர்களுக்கான நம்பிக்கை நிறுவனமும் (Hope For Children) ஏனைய 14 பிள்ளைகளுககான உதவிகளை அமெரிக்காவிலுள்ள கலிபோர்னியா தமிழ் மன்றமும் வழங்கி வருகின்றன என்று குறிப்பிட்டார்.

இவ்விரு திட்டங்களின் மூலம் பெற்றோர்களை இழந்துள்ள 44 சிறுவர்களும் பயன்களைப் பெற்று வருகின்றனர்.

இச்சிறுவர்களுக்கு மாதாந்தம் தேசிய சேமிப்பு வங்கியில் குறிப்பிட்ட தொகை வைப்பிலிடப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (உ-16)

## கிராமிய மதிப்பீடு

(வவுனியா)

வ்வுனியா, பூம்புகார் கிராம மக்கள் பங்கேற்புடனான கிராமிய மதிப்பீடு நேற்றுக்காலை 9.00 மணிக்கு பூம்புகார் கிராம கண்ணகி வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட நிக்கோட் நிறுவனப் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ம.கிருபாசுதன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா மாவட்ட அரச அதிபர் க.கணேஷ் அவர்கள் கலந்து கொண்டார். (உ)

## வவு.மாவட்ட முன்பள்ளி கல்வி மேம்பாட்டு உறுப்பினர் தெரிவு

(வவுனியா)

வவுனியா மாவட்ட முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய உறுப்பினர்கள் தெரிவு நேற்று வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிமனையில் வவுனியா மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் சி.திருஞானசம்பந்தமூர்த்தி தலைமையில் இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினராக வவுனியா மாவட்ட அரச அதிபர் க.கணேஷ் கலந்து கொண்டார். வவுனியா பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ஏ.அன்ரன் சோமராசா, தெற்கு வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.கணேசபாதம், வடக்கு வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ.விநாயகமூர்த்தி, ஆசிரியர் ஆலோசகர் ஜெவீரா மற்றும் தனியார் தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகள், வவுனியா வடக்கு, தெற்கு வலய உறுப்பினர்கள், நலன்விரும்பிகள், முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய வலய இணைப்பாளர்கள், பிரதேச இணைப்பாளர்கள் போன்றோர் கலந்து கொண்டார்கள். (உ)

## தீவகம் சென்ற ரவிராஜ் எம்.பி. நிலைமையை நேரில் அவதானித்தார்

(யாழ்ப்பாணம்)

கடந்த வியாழக்கிழமை பாராளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் புங்குடுதீவு 4ஆம் வட்டாரம் "நுனுகல்" கிராமத்திற்குச் சென்று அங்குள்ள மக்களின் வீதிச் சீர்கேட்டுப் பிரச்சினை, குடிநீர்ப் பிரச்சினை என்பவற்றை நேரில் அவதானித்தார்.

அங்கு மே மாதம் 4ஆம் திகதி காலை 9.00 மணிக்கு 25 சிறுவர்களுக்கு முன்பள்ளி ஒன்று ஆரம்பிக்க உடனடியாகத் தீர்மானித்துள்ளார்.

மேலும், சிறுப்பிட்டி கடற்கரை வரையிலான வீதி சீர்கேட்டினையும், மற்றும் அங்குள்ள பாடசாலை ஆசிரியர்கள் இந்த வீதி சீர்கேட்டினால் பிரயாண சிக்கலுக்குள் அவஸ்தைப்படுவதையும் நேரில் பார்வையிட்டதுடன், புங்குடுதீவு அரசினர் ஆஸ்பத்திரியையும் நேரில் பார்வையிட்டு அது இயங்க முடியாத நிலையைக் கேட்டு மிகவும் கவலை அடைந்தார்.

இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் உடனடியாகப் பேசி தீர்வுகள் எடுத்துத் தருவதாகவும் உறுதி கூறினார்.

மேலும், புங்குடுதீவு தென்னிந்திய திருச்சபை மண்டபத்தில் நடந்த கலந்துரையாடலில் தீவுப் பகுதி மக்கள் பலர் அவரை நேரில் சந்தித்து மனுக்கள் கையளித்தனர். இவை அனைத்திற்கும் தான் உடனடியாகத் தீர்வு காண்பதாகவும் உறுதியளித்தார்.

அவரின் இந்த விஜயத்தின் போது திலீபன் மருத்துமனைக்குச் சென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவு இப்பகுதி மக்களுக்கு செய்யும் சேவையை மனமுவந்து பாராட்டினார். மீண்டும் எதிர்வரும் 4ஆம் திகதி புங்குடுதீவுக்கு விஜயம் செய்யவுள்ளார். (உ)

## விருப்பு வாக்குகளை மீள எண்ணக்கோரி மனு

(பதுளை)

கடந்த பொதுத் தேர்தலின் போது பதுளை மாவட்டத்தின் ஐக்கிய தேசியக் கட்சியின் விருப்பு வாக்குகளை மீள எண்ணுமாறு கோரி அடிப்படை மீறல் மனுவொன்று உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனுவானது பதுளை மாவட்டத்தில் கடந்த பொதுத் தேர்தலின் போது ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட வேட்பாளர்களான கே.வேலாயுதம் மற்றும் எஸ்.முத்துக்குமார் ஆகியோரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையாளர் உட்பட 13 பேர் இம்மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். விருப்பு வாக்குகள் எண்ணப படும்போது ஏற்பட்ட சில சம்பவ ங்கள் தமது அடிப்படை உரிமையை மீறி இருப்பதாகவும், இதனால் விருப்பு வாக்கு களை மீள எண்ணுவதற்கான உத்தர வைப் பிறப்பிக்குமாறு மனுவில் கோரப்பட்டுள்ளது. (உ-121)

## மனிதமேம்பாட்டு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சத்திய சாயி மனித மேம்பாட்டு செயல்திட்டத்தின் கீழ் சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு 'மனித மேம்பாடு' எனும் தலைப்பிலான கருத்துரை கைதடி அரச முதி யோர் இல்லத்தில் அண்மையில் நடாத்தப்பட்டது.

இல்லத்தின் அத்தியட்சகர் கே.வி.சிவநேசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம் (நந்தி) கருத்துரை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் தென்மராட்சி பிரதேச சமுர்த்தி உத்தியோகத் தர்கள் பங்குபற்றியிருந்தனர். (உ-16)

# சிறைவைக்கப்பட்டுள்ள ஈராக்கியரை முறைகேடாக நடத்துவதை அமெரிக்க அரசாங்கம் அறிவிப்பு

(ஈராக்)

சிறைவைக்கப்பட்டுள்ள ஈராக் கைதிகளை அமெரிக்க இராணுவத்தினர் முறைகேடாகத் துன்புறுத்தியதாகக் குற்றம்சாட்டப்பட்டு வரும் நிலையில்,இராணுவத்தினரின் இவ்வாறான செயல்கள் அனுமதிக்கப்பட முடியாதவையென அமெரிக்க அரசாங்கம் அறிவித்துள்ளது.

சிறையில் அடைக்கப்பட்டுள்ள ஈராக் கைதிகளை முறைகேடாகத் துன்புறுத்திய அமெரிக்க இராணுவச் சிப்பாய்கள் விரைவில் இனம் காணப்படுவர். இவர்கள் மீது தீவிர விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதுடன், குற்றச் செயல்களுக்காக இவர்கள் மீது கடும் நடவடிக்கையும் எடுக்கப்படுமென அமெரிக்க அதிபர் சார்பாகப் பேசவல்ல அதிகாரியொருவர் கருத்துத்தெரிவித்துள்ளார்.

ஈராக்கிய சிப்பாய்களை அமெரிக்க இராணுவத்தினர் முறைதவறி துனபுறுத்தி இழிவுபடுத்துவதான படங்கள் உலகெங்கிலும் பரவலாக அண்மையில் ஒளிபரப்புச் செய்யபபட்டிருந்தன.

இதனையடுத்து,அமெரிக்க இராணுவத்தினரின் இவ்வாறான மோசமான செயற்பாடுகளுக்கு உலகெங்கிலுமுள்ள பல அமைப்புக்களும் தமது கடும் கண்டனங்களை வெளிப்படுத்தியுள்ளன.

அத்துடன்,ஈராக்கை ஆக்கிரமித்துள்ள அமெரிக்கப் படைகள் நெறி தவறி மோசமாக நடந்து கொள்வதை இந்தப் படங்கள் ஆதாரமாகக் காட்டுகின்றனவென அரபுத் தொலைக் காட்சியொன்றும் சில நாட்களுக்கு முன்பு செய்தி வெளியிட்டிருந்தது.

இதேவேளை,இந்தப் படங்களைக கண்டு தான் மிகவும் திகைத்துப் போயுள்ளதுடன் பெரும் அதிர்ச்சியும் அடைந்துள்ளதாக பிரிட்டிஷ் பிரதமர் ரோனிபிளேயரும் கருத்து வெளியிட்டுள்ளார்.


உலகெங்கிலும் எழுந்துள்ள இவ்வாறான கடும் கண்டனங்களை அடுத்தே, சிற்றவைக்கப்பட்டுள்ள ஈராக்கியர் மீது கொடுமைகள் புரிந்த அமெரிக்க இராணுவத்தினர் கடுமையான தண்டனைக்குள்ளாக்கப்படுவர் என அமெரிக்க அரசாங்கம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-18)

## குண்டு வெடிப்பு

(ஈராக்)

ஈராக்கின் பலூஜா நகரிலிருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறிக் கொண்டிருக்கும் நிலையில், பலூயா நகரின் முக்கிய அமெரிக்க இராணுவத்தளத்திற்கு வெளியே சாலையோரத்தில் குண்டொன்று வெடித்துள்ளது.

மேற்படி குண்டுவெடிப்புச் சம்பவத்தில் அமெரிக்க இராணுவச் சிப்பாய்கள் இருவர் கொல்லப்பட்டுள்ளதாக அமெரிக்க இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ஜெனரல் மஹாப ஹெமத் தெரிவித்துள்ளார். (உ-18)



தெருவோரக் குடிநீர்க் குழாய்களை பயன்படுத்தும் உரிமை மனிதர்க்கு மட்டுமா? தண்ணீர் தாகத்தால் தவித்த குரங்கார் ஒருவர் தனது உரிமையையும் நிலைநாட்டத் தவறவில்லை. இந்தியாவின் திருச்சி அருகில் உள்ள முக்கொம்பு என்ற இடத்தில் பதிவான காட்சி இது.

## அம்மான் மீது தாக்குதல் நடத்தும் திட்டமேதுமில்லை

### மறுக்கிறது அல்கெய்டா

(ஜோர்தான்)

ஜோர்தான் தலைநகர் அம்மான் மீது அல்கெய்டா அமைப்பினர் இரசாயன ஆயுதத் தாக்குதல்களை நடாத்துவதற்குத் திட்டமிட்டிருப்பதாக வெளியாகிய செய்திகளுக்கு அல்கெய்டா அமைப்பு மறுப்புத் தெரிவித்துள்ளது.

மேற்படி தாக்குதலை நடாத்துவதற்குத் திட்டமிட்டுள்ளதாக வெளியான செய்திகளுக்கு அல்கெய்டா அமைப்பின் தலைவரெனத் தன்னை இனம் காட்டிக் கொள்ளும் ஒருவர் மறுப்புத் தெரிவிப்பதான ஒலி நாடாவொன்றை அரபுத் தொலைக்காட்சியொன்று ஒலிபரப்புச் செய்துள்ளது.

அல்கெய்டா அமைப்பின் மூத்த உறுப்பினர்களில் ஒருவரான அபு முஸ்தப்அலி என்பவரே இந்த ஒலி நாடா மூலம் இந்தச் செய்திக ளுக்கு மறுப்புத் தெரிவித்துள்ளார்.

தற்போது ஜோர்தானிய அதிகாரிகள் உண்மைக்குப் புறம்பான செய்திகளையே வெளியிட்டு வருகின்றனர். எனினும்ஜோர்தானிய உளவுப்பிரிவின் தலைமையகம் மீது தாக்குதலொன்றை நடாத்துவதற்குத் தங்களுக்குத் திட்டம் இருந்தது என்று அந்த ஒலிநாடா செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், அண்மையில் தொலைக் காட்சி ஒன்று அல்கெய்டா அமைப்பினர் என்று கருதப்படுபவாகளின் வாக்கு மூலங்கள் சிலவற்றை ஒளிபரப்புச்செய்திருந்தது. அவர்களைத் துன்புறுத்திப் பெறப்பட்ட வாக்கு மூலஙகளே ஒளிபரப்புச் செய்யபபட்டன. இதில் எதுவித உண்மையுமில்லை என அவ் ஒலி நாடா வில் மேலும் செய்தி வெளியிடப் பட்டுள்ளது. (உ-18)




ஆப்கானிஸ்தானில் கம்யூனிஸ்ட் ஆட்சி நீக்கப்பட்டு 12 ஆண்டுகள் நிறைவடைந்தமை தொடர்பாக காபூலில் கடந்த புதன்கிழமை நடந்த விழாவில் மாணவிகள்

## இஸ்ரேலின் ஒரு தலைப்பட்சமான திட்டத்தை பலஸ்தீனம் நிராகரிக்கக் கூடாது

### ஐ.நா செயலர் அனான் அறிவுரை

மத்திய கிழக்கின் காஸாப் பகுதியிலிருந்து ஒருதலைப்பட்சமாக இஸ்ரேஸ் வெளியேறுவது என்ற திட்டத்தை பலஸ்தீனியர்கள் ஒரேயடியாக நிராகரிக்கக் கூடாது என ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் நாயகம் கோபிஅனான் வலியுறுத்தியுள்ளார்.

ஏனைய விடயங்களில் இஸ்ரேல் எப்படி நடந்து கொண்டாலும் அதனுடைய இந்தத் திட்டத்தை ஏறபது குறித்து பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத் ஒருமுறையாவது பரிசீலிக்க வேண்டும்.



இந்தத் திட்டத்தால் அமைதி முயற்சிகள் மலர்ச்சிபெற வாய்ப்பு உண்டு .எனக் குறிப்பிட்டு கோபிஅனான் யஸீர் அரபாத்துக்கு எழுதியகடிதம் ஒன்று தமக்குக் கிடைக்கப் பெற்றுள்ளதாக ரொய்டர் தெரிவித்துள்ளது.

அத்துடன்,இஸ்ரேல் தீவிரவாத தலைவர்களைப் படுகொலை செய்திருப்பதையும் சர்வதேச சட்டங்களை மீறும் வகையில் ஆக்கிரமிக்கப்பட்ட நிலப்பரப்பில் குடியிருப்பவர்களைத் துன்புறுத்துவதையும் ஐ.நா.செயலாளர் நாயகம் கோபிஅனான் கண்டிப்பதாக வும் ரொய்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

மத்திய கிழக்கு அமைதித் திட்டத்தின் நிபந்தனைகளை பலஸ்தீன அரசாங்கம் நிறைவேற்றாமல் இருந்து வருகிறதெனக் குற்றஞ்சாட்டியுள்ள கோபி அனான், தீவிரவாதிகளின் வன்முறைச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்குப் பலன்தரக்கூடிய வகை யில் விரைவில் நடவடிக்கைகளை எடுக கவேண்டுமெனவும் சுட்டிக் காட்டியுள்ளதாக ரொய்டர் மேலும செய்தி வெளியிட்டுள்ளது. (உ-18)

## 3.8மில்லியனுக்கும் மேலான நைஜீரியரில் எச்.ஐ.வி தொற்று

நைஜீரிய் நாட்டிலுள்ள 3.8 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் எச்.ஐ.வி வைரஸினால் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டின் சுகாதரத்துறை புள்ளி விபரங்கள் மூலம் தெரிய வந்துள்ளது.

அத்துடன், அந்நாட்டு சனத்தொகையல் 5 சதவீத மானவர்களுக்கு இந்த நோய்ததாக்க முள்ளதாக கண்டறி யப்பட்டுள்ளது.

எயிடஸ்நோய்க்கா வியான எச் .ஐ.வி. வைரஸ் ஆபிரிக்க நாடொன்றில் தாக்கத்தை ஏற்படுத்யுளளமை புதுமையான தொன்றல்ல, இதற்கு வறுமையும் மக்கள் மத்தில் உள்ள அறியாமையுமே காரணமாகுமென உலக எயிடஸ் நோய் தடுப்புப் பிரிவின் தலைவர் தெரி வித்துள்ளார்.

இதேவேளை நைஜீரியாவில் 2.3 மில்லியன் மக்கள் இந்த எயிட்ஸ் நோயினால் இது வரையான காலங்கலில் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-18)

## 13 ஆயிரம் பேர் ஒன்றாக செஸ் விளையாடிச் சாதனை

### கின்னஸில் பதிவாகிறது கியூபா

(சாண்ட்ரா கிளாரா)

கியூபாவில் ஒரே நேரத்தில் 13ஆயிரம் பேர் செஸ விளையாடி சாதனை படைத்துள்ளனர்.

இதற்கு முன்பாக 2002இல் ஹவானாவில் 11ஆயிரத்து 320 பேர் செஸ் விளையாடியதே கின்னஸ் சாதனையாக பதிவு செய்யப்பட்டு இருந்தது. அதைச் சாதித்ததும் கியூபாதான் என்பது குறிப்பிடத்தக்கது.

கியூபாவின் தற்போதைய சாதனையைத் தொடங்கி வைத்தவர் ரஷ்யாவைச் சேர்ந்த முன்னாள் உலக சம்பியன் அனடோலி கார்போவ்.

இச்சாதனை நாயகனான அவரை ஆச்சர்யத்துடன் பார்த்த கியூபா வாசிகள் ஆட்டோகிராப் வாங்கத் திரண்டனர்.

"எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. எல்லோருக்கும் இந்த வாய்ப்பு கிடைப்பதில்லை என்று 19வயது மருத்துவ மாணவர் கில்பர்டோ காசனோவா தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

இவர் இப்படிக் கூறுவதற்குக் காரணம் இவரது கைகளில் கார்போவ் போட்ட கையெழுத்துத் தான்.


சாதனை நிகழ்த்தப்பட்ட இடத்தில் புரட்சியாளர் சே.குவேராதுப்பாக்கியை ஏந்திய வெண்கலச் சிலை இருந்தது. அதன் எடை 20 தொன். அச்சிலையின் கீழ் வெற்றியை நோக்கி என்ற வாசகம் பொறிக்கப்பட்டிருந்தது. (உ)



சர்வதேச விண்வெளி ஆய்வு நிலையத்திலிருந்து சோயுஸ் விண்கலம் கஜகஸ்தானில் வெள்ளிக்கிழமை தரையிறங்கியதும் இளைப்பாறும் (இடமிருந்து) யு.எஸ். வீரர் மைக்கேல் ∴போலே, அலெக்சாண்டா கலேரி, டச்சு வீரர் ஆண்ட்ரே குயுயூபர்ஸ்

# சின்னாபின்னப்பட்ட சிம்பாப்வே அணி

சிம்பாப்வே கிரிக்கெற் அணியில் 15 வெள்ளையின சிரேஷ்ட வீரர்களின் பகிஷ்கரிப்பினால் மனம நொந்து போயிருந்த சிம்பாப்வே கிரிக்கெற் சபைக்கு சிம்பாப்வே அணியின் படுதோல்வியானது (5:0 என்ற அடிப்படை) வெந்த புண்ணில் வேல்பாய்ச்சும் செயலாக



அமைந்துள்ளது.

சிம்பாப்வேக்கு கிரிக்கெற் சுற்றுப் பயணம் மேற்கொண்ட இலங்கை அணி இந்திய மண்ணில் பாரிய வெற்றி ஒன்றைப் பெற்றிருக்கிறது.

# இலங்கை எட்டிய வெற்றிகளுக்கு இதுவும் ஒரு காரணி

சிரேஷ்ட வீரர்களின் வெளியேற்றத்தின் பயனாக இரண்டாம் நிலை அணி ஒன்றையே சிம்பாப்வே கிரிக்கெற்சபை தெரிவு செய்தது.

இலங்கை அணியுடன் இந்த இரண்டாம் நிலை அணியே போட்டிகளில் பங்கேற்றது. இளம் வீரர்களைக் கொண்ட இந்த இரண்டாம் நிலை அணிக்கு டடென்பு தைபு (20வயது) தலைமை தாங்கினார். சிறுவயதில் அணியினைப் பொறுப்பேற்று சிறப்பாக இவ் அணியினை நடத்திச் செல்கின்றமை வேறுகதை.

ஆனால் தைபு தலைமையிலான சிம்பாப்வே அணிக்கு 5போட்டிகளிலும் அடிமேல் அடி விழுந்தது. குறிப்பாகச சொல்லப் போனால் இலங்கை அணி சிம்பாப்வே அணியுடனான 3வது ஒருநாள் போட்டியில் சாதனைப் பதிவேட்டில் மீண்டுமொரு சாதனையைப் பதிவு செய்திருக்கிறது. சிம்பாப்வே அணியை குறைந்த ஓட்டங்களுக்குள் (35ஓடடங்கள்) தோல்வி அடையச் செய்ததே இந்தச் சாதனையாகும்.

## பகிஷ்கரிப்பால் பறிபோனது பதவி

சிம்பாப்வே அணித்தலைவர் பதவியில் இருந்து ஹீத் ஸ்ரீக் பதவி விலகுவதாக அறிவித்ததும் அதனைத் தொடர்ந்து உருவாகிய சர்ச்சைகள் அந்த அணியை பாரிய நெருககடிக்குள் தள்ளியது. ஹீத ஸ்ரீக் தான் பதவி விலகுவதாக குறித்து சிந்தித்து வருவதாக கருத்து வெளியிட்ட ஒருசில மணித்தியாலங்களுக்குள் அவர் அணித்தலைவர் பதவியில் இருந்து விலக்கப் பட்டதாக அறிவிக்கப்பட்டது.

ஹீத் ஸ்ரீக்கிக்கு எதிரான இந்த நடவடிக்கைகளுக்கெதிராக குரல கொடுத்த அணியின் ஏனைய வீராகளும் (15வெள்ளையின வீரர்கள்) அணியில் இருந்து நீக்கப்பட்டனர். இலங்கை அணியுடனான கிரிக்கெற சுற்றுப் போட்டிக்காக முன் அனுபவம் இல்லாத 14வீரர்கள் கொண்ட அணியொன்று தெரிவு செய்யப் பட்டுள்ளது. ஏனையவர்களும் ஹீத ஸ்ரீக்கிறகும் மிக வேகமாக அரசியல் மயப்படுத்தப்பட்டு வரும் சிம்பாப்வே அணியின் கிரிக்கெற் கட்டுப்பாட்டுச்சபையை (**Zimbawe cricket union**) எதிர்த்துக் குரல் கொடுத்ததாலேயே பலியாகியுள்ளனர்.

சிம்பாப்வே கிரிக்கெற் கட்டுப் பாட்டுச் சபையில் உள்ள அரசியல் செல்வாக்கு காரணமாக கிரிக்கெற் விளையாடிய அனுபவம் சிறிதளவும் இல்லாத பலர் கட்டுப்பாட்டுச் சபையில் இடம்பெற்றுள்ளனர். ஸ்ரீக் பதவி நீக்கம் செய்யப்படுவதற்கு முன்னரே கட்டுப்பாட்டுச் சபையுடன் மோதியதற்காக பிரையன் ஸீட்ரோங் அணியில் இருந்து நீக்கப்பட்டார். கடுமையான அரசியல் நெருக்கடிகள் காரணமாக சிம்பாப்வே ஆனது அரசியல் துருவங்களாக பிரிந்து நிற்கின்றது.

சிம்பாப்வே கிரிக்கெற் சபையானது இந்த நெருக்கடியில் தன்னைப் பாதிக்காத வகையில் சுதந்திரமாக செயற்பட முன்வந்த போதிலும் அது முடியாமல் போனது சிம்பாப்வே கிரிக்கெற் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் (**Peter chingoka**)வை சுதந்திரமாக செயற்பட முடியாதபடி சபையில் அங்கம்வகிக்கும் ஏனைய அரசியல் சக்திகளின் செயற்பாடுகள் அமைந்துள்ளன.



சமிந்தவாஸ்-சாதனையும் ஒரு (என்னுடைய) வேகப்பந்தே.

குறிப்பாக **Ozazis Bvute** எனப்படும் ஒருவர் குறித்து சுட்டிக் காட்டப்படுகின்றது. சிம்பாப்வே அணியில் விகிதாசார அடிப்படையில வீரர்கள் இடம்பெறுவதை உறுதி செய்வதற்காக நியமிக்கப் பட்டவர் இவர். எனினும் இவருக்கு கிரிக்கெற் பின்னணி எதுவும் கிடையாது எனக் கூறப்படுகின்றது.

கிரிக்கெற்றுடன் தொடர்பில்லாதவர்கள் தெரிவுக்குழுவில் இடம் பெறுவதை ஹீத் ஸ்ரீக் கடுமையாக எதிர்த்ததன் காரணமாக அணித் தலைவர் பதவியில் இருந்து தூக்கி எறியப்பட்டார். சிம்பாப்வே கிரிக்கெற் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர், பிரதம நிறைவேற்று அதிகாரி சிம்பாப்வேயில் கிரிக்கெற் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு சமரச முயற்சிகளில் ஈடுபட்ட போதிலும் **OzazisBvute** போன்றவர்கள் அதற்கான சாத்தியங்களைத் தடுத்து விட்டனர். இந்த பூறாட் எம்டேயே, கையில் கறுப புபபட்டி அணிந்து விளையாடிதற்காக வேகப்பந்து வீச்சாளர் ஓலங்காவை சிம்பாப்வே அணி பயணம் செய்த பேருந்தில் இருந்து கீழே இறக்கியவர். அத்துடன் முன்னாள் அணித்தலைவர் அன்டி பிளவர் அணியில் இருந்து விலகி ஓய்வுபெறவும் இவரே காரணமாக இருந்தார்.

## நாங்களே வரலாறு

சர்வதேச ஒருநாள் கிரிக்கெற் போட்டிகளில் எதிரணியை மிகக் குறைந்த ஓட்டங்களுக்குள் ஆட்ட மிழக்கச்செய்து மீண்டும் சாதனை படைத்திருக்கிறது. இலங்கை அணி கடந்த ஞாயிற்றுக்கிழமை கராரேயில் நடைபெற்ற மூன்றாவது ஒருநாள் போட்டியில் சிம்பாப்வே அணியை 35ஓட்டங்களுக்குள் ஆட்டமிழக்கச் செய்ததன் மூலம் இந்தச் சாதனையை படைத்திருக் கிறது.

2004ஆம் ஆண்டு இலங்கை சிம்பாப்வே அணிகளுக்கிடையில் கொழும்பில் நடைபெற்ற ஒருநாள் சர்வதேச போட்டியில் இலஙகை அணி சிம்பாப்வே அணியை 38 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழககச் செய்து மேற்கிந்தியத்தீவுகள் அணியின் முன்னாள் சாதனையை (பாகிஸ்தான் அணியை 43ஓட்டங்களுக்குள் ஆட்டமிழக்கச செய்தது) முறியடித்து புதிய சாதனை படைத்தது.

2001ஆம் ஆண்டு இலங்கை அணி தான் ஏற்படுத்திய உலக சாதனையை 2002ஆம் ஆண்டு உலகக்கிண்ணப் போடடியின் போது தானே முறியடித்தது. கனடா அணியை 36ஓட்டங்களுக்குள் ஆட்டமிழக்கச் செய்ததன் மூலம் மீண்டும் அந்தச் சாதனையைப் படைத்தது. மேற்படி சாதனையை முறியடித்து தற்போது மீண்டும ஒரு சாதனையை சிம்பாப்வே அணிக்கு எதிராக இலங்கை அணி படைத்திருக்கிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கரரேயில் சிம்பாப்வே அணியுடன் நடைபெற்ற 3வது போட்டியில் அந்த அணியை 35ஓட்டங்களுக்குள் ஆட்டமிழக்கச் செய்து புதிய சாதனையைப் படைத்தது.

இப் போட்டியானது மொத்தம் ஒரு மணித்தியாலம் 39நிமிடங்கள் மட்டுமே நடைபெற்றமை குறிப பிடத்தக்கது. அத்துடன் இந்தப் போட்டி மொத்தம் 27.2ஓவர்கள் கொண்டதாகவும் அமைந்தது. இதில் சிம்பாப்வே அணி 89நிமிடங்கள் மட்டுமே துடுப்பெடுத்தாடி 18ஓவர்களில் 35ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இலங்கை அணி 9.2ஓவர்கள் துடுப்பெடுத்தாடி 40 ஓட்டங்களைப் பெற்றது.

## சாதனைக்கு வித்திட்டார் சமிந்த வாஸ்

சிம்பாப்வே அணிக்கெதிரான 3வது ஒருநாள் போட்டியில் சிம் பாப்வே அணி வீரர் மரிக்வெடை ஆட்டமிழக்கச் செய்ததன் மூலம் சர்வதேச ஒருநாள் போட்டிகளில் 300விக்கெற்றுக்களை வீழ்த்திய 6வது வீரர் என்ற சாதனையை இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் சமிந்த வாஸ் பெற்றார். முரளிதரனுக்குப் பின் இலங்கை அணி சார்பில் 300விக்கெற்றுக்களை வீழ்த்திய இரண்டாவது வீரர் என்ற பெருமையையும் வாஸ் தனதாக்கிக கொண்டார்.

இப் போட்டியில் சமிந்த வாஸ் 9ஓவர்கள் பந்துவீசி 4 மெய்டின்கள் அடங்கலாக 11ஓட்டங்களைக் கொடுத்து 4விக்கெற்றினை வீழ்த்தினார். இவர் வீழ்த்திய 4விக்கெற்றுக்களும் இலங்கையணியின் உலக சாதனைக்கு அத்திவாரமாக அமைந்தது. அத்துடன், இலங்கையணி 2001ஆம் ஆண்டு சிம்பாப்வே அணியை 38 ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்கச் செய்ய இவர் வீழ்த்திய 18 ஓட்டங்களுக்கு 8விக்கெற றுக்களே பெறுமதியாக இருந்ததுடன், உலக சாதனையாகவும் அமைந்துள்ளது.

## தருணம் பார்க்கும் முரளி

2004ஆம் ஆண்டானது டெஸ்ட் கிரிக்கெற் வரலாற்றில் இரண்டாவது தனி நபர் உலக சாதனையை இப்போது எதிர்பார்த்துள்ளது. முதலாவது உலக சாதனை மேற்கிந்திய அணியின் தலைவர் பிறையன்லாரா டெஸ்ட் போட்டியில் ஆட்டமிழக்காமல் பெற்ற 400 ஓட்டங்கள் ஆகும். இப்போது அனைவரினது பார்வையும் இலங்கை அணியின் நட்சத்திர சுழற் பந்து வீச்சாளர் முததையா முரளிதரனின் பக்கம் திருமபியுள்ளது.

ஆங்கிலேயர் ஆரம்பித்து வைத்த கிரிக்கெற் விளையாட்டில் தாங்களே ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்ற அவர்களின் "கிரிக்கெற றுத்துவம்" தான் ஆசிய அணியில் கிரிக்கெற் வீரர்களுக்கு அவர்கள் அவ்வப்போது கொடுக்கும் மறைமுகத் தாக்குதல் கள். அந்தவகையில் முரளிதரனின் பந்துவீச்சில் காலத்திற்குக்காலம் அவர்கள் எழுப்பிவரும் வயிற்றெரிச சல்களின் வெளிப்பாடு என்பதை கிரிக்கெற் உலகம் அறியாமல் இல்லை. ஒரு காலத்தில் சூரியன் அஸ்தமிக்காக ஆட்சி எங்களுடையது என உலகில் பல நாடுகளை தமது காலணித்துவத்தின் கீழ் கொண்டுவந்த இங்கிலாந்து (பிரிட்டிஷ்) தான் அறிமுகப்படுத்திய கிரிக்கெற் விளையாட்டில் இதுவரை உலகக் கிண்ணத்தைக் கைப்பற்ற வில்லை. நிறைவெறியில் இன்னமும் முழ்கிப் போயிருக்கும் அவாகளுக்கு முதலில் கிடைத்த பேரிடிதான் கறுப்பினர்த் தவர்களின் மேற் கிந்திய அணி முதலாவது உலகக் கிண்ணப் போட்டியில் அவர்களை இறுதிப் போட்டியில் தோற்கடித்தது.

தற்போது டெஸ்ட் கிரிக்கெற்றின் பந்து வச்சினைப் பொறுததவரை உலகில் மூன்றாவது இடத்தில் இருக்கும் (513 விக்கெற்றுக்கள்) முரளிதரன் எதிர்வரும் 6ஆம் திகதி சிம்பாப்வே அணியுடன் இடம்பெறவிருககும் முதலாவது டெஸ்ட் போட்டியில உலக சாதனை படைப்பார் என்பதே அனைவரினதும் எதிர்பார்பபாகும். 500 விக்ற்றுக்களை முதலில் கடந்த சுழற்பந்து வீச்சாளர் என்ற பெருமை முரளிதரன்-பொறுமை (520விக்



கெற்றுகள்) பயணளிக்குமா? அவுஸ்திரேலிய அணியின் ஷேன் வோணைச் சார்ந்தாலும் அதிக டெஸ்ட் விக்கெற்றுக்களை வீழ்த்திய சுழற்பந்து வீச்சாளர் என்ற பெருமை முரளிதரனையே நிச்சயம் சாரும்.

முரளியின் பந்துவீச்சுத் தொடர்பான ஆய்வில் அவர் தொடர்ந்து பந்து வீசினால் ஒருவருட காலத்திற்கு அவருக்கு கிரிக்கெற் விளையாடுவதற்கு தடை விதிக்கப்படும் என ஐ.ஸீ.ஸி கூறியிருந்தாலும் இது குறித்து (**Doosra**) முழுவது மான அறிக்கை வரும்வரை இப் பாணியில்பந்தை வீசவேண்டாம்என இலங்கை கிரிக்கெற்சபை அவரைக் கேட்டுக் கொண்டதாகத் தெரிகிறது.

பண்பாளர்களின் விளையாட்டு என வர்ணிககப்பட்ட கிரிக்கெற்றில் இபபடிக் காலத்திற்குக் காலம் ஒருவரைப்பற்றி தொடர்ச்சியாக குற்றச்சாட்டுக்களைச் சுமத்திககொண்டே வருவது பண்பான செயலா எனக கேட்கத் தோன்றுகின்றது. சாவதேச கிரிக்கெற் சபையை முரளிதரனின் பந்துவீச்சுப் பாணியில் குற்றமில்லையெனக் கூறியபிறகும் மைக் புரோட்டின் கருத்து பண்பானதா என்று யோசிக்கத் தோன்றுகின்றது.

சர்ச்சையில் சிக்கியுள்ள முரளியின் **Doosra** பந்துவீச்சானது சர்ச்சையில் இருந்து மீண்டும் முரளி சாதனை படைப்பதைக் காண கிரிக்கெற் உலகம் காத்திருக்கிறது.

## மீள்வருகை பலனளிக்குமா?

இலங்கையுடனான இரண்டு டெஸ்ட் போட்டிகளில் விளையாடுவதென பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ள சிம்பாப்வேயின் சிரேஷ்ட வீரர்கள் முடி வெடுத்துளளனர். இதனடிப்படையில் நேற்றுமுதல் பயிற்சிகளில் ஈடுபடவுள்ளனர்.

கடந்த ஒருமாத காலமாக நீடித்த இழுபறி நிலை இதன்மூலம் முடிவுக்கு வந்துள்ளது. சிம்பாப்வேயின் வெள்ளையின 15 சிரேஷ்ட

**நோயல்**

வீரர்களும் பயிற்சிகளுக்குத் திரும்பாவிடின் அவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு முழுமையான வெளியேற்றத்துக்கு உள்ளாக்கப்படுவார்கள் என சிம்பாப்வே கிரிக்கெற் சபை அறிவித்துள்ளது.

அதன் பிரகாரம் அணியின் இந்த சிரேஷ்ட வீரர்களும் இன்று தொடக்கம் பயிற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். அத்துடன் நேற்று ஆரம்பமான பயிற்சிப் போட்டியில் நான்கு வெள்ளையின வீரர்கள் பங்குபற்றி வருகின்றனர். ஹீத் ஸ்ரீக் உட்பட ரவர் கிறீப்பர், றேப்பிறைஸ், ஷோன் ஏர்வின் ஆகியோரே அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ள நான்கு வீரர்களுமாவார்.

## விசா மோசடி, போலி ஆவண விநியோகம்

# இலங்கைக்கான அமெ. தூதரத்தில் பணிபுரிந்த தம்பதியினருக்கு 5 வருடச் சிறை

(கொழும்பு)

பாரிய அளவில் விசா மோசடி செய்தல் மற்றும் போலி ஆவணங்களை விநியோகித்து ஆட்கடத்துதல் ஆகிய குற்றச் செயலில் ஈடுபட்டுவந்த அமெரிக்காவைச் சேர்ந்த தம்பதியினருக்கு 5 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கலிபோர்னியா மாவட்ட நீதிமன்றம் நேற்று இந்தத் தீர்ப்பை வழங்கியது.

இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் முன்னர் கடமையாற்றி வந்த இத் தம்பதியினர் பெருமளவு பணத்தை லஞ்சமாகப் பெற்று போலி விசாவை வழங்கி சட்டவிரோதமாக ஆட்களைக் கடத்தினார்கள் என்றும், இவர்களின் இத்தகைய செயலால் அமெரிக்காவுக்கு அபகீர்த்தி ஏற்பட்டுள்ளதாகவும், குற்றஞ்சாட்டப்பட்டு இவர்களுக்கு எதிராக அமெரிக்கத் தூதரக அதிகாரிகளால் அண்மையில் கலிபோர்னியா மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அத்துடன், அமெரிக்காவின் இராஜதந்திரப் பாதுகாப்புப் பணியகம் மற்றும் இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதரகம் ஆகியன இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட தம்பதியினர் குற்றச்செயலில் ஈடுபட்டதிற்கான ஆதாரத்தை நீதிமன்றில் சமர்ப்பித்தனர்.

இதேவேளை, விசா மோசடி மற்றும் போலி ஆவணங்களை விநியோகித்து ஆட்களைக் கடத்தியதாக குற்றஞ் சுமத்தப்பட்ட மேற்படி தம்பதியினரான எச்.ஏ.யாங்சன், லோங்பி ஆகியோர் குற்றத்தை ஒப்புக்கொண்டனர்.

இதனையடுத்து, கலிபோர்னியா மாவட்ட நீதிமன்ற நீதிபதி 5 வருடகால சிறைத் தண்டனையை விதித்ததுடன், 7 இலட்சத்து 50 ஆயிரம் டொலர் தண்டப்பணத்தைச் செலுத்துமாறும் தீர்ப்பளித்தார். (உ-60,10)

## விபத்தில் படுகாயம

(கிளிநொச்சி)

கிளிநொச்சி 3ஆம் வாய்க்கால் பகுதியில் நேற்று முன்தினம் [illegible] தொன்றில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

கிளிநொச்சி, கல்மடு நகரைச சேர்ந்த என்.ஜெயமோகன் (வயது-21) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்த இவர் கிளிநொச்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டு அங்கு சிகிச்சை பெற்று வருகின்றார். (உ-64,10)

## சமாதான முயற்சிக்கு புத்துயிர்

# நோர்வே பிரதி அமைச்சர் இலங்கை வந்தடைந்தார்

(கொழும்பு)

நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கீசன் தலைமையிலான தூதுக் குழுவினர் நேற்றுக் காலை கொழும்பை வந்தடைந்தனர்.

தூதுக் குழுவுக்கு தலைமை தாங்கும் நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெலகீசன் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை நேற்று அலரி மாளிகையில் சந்தித்து சமாதானப் பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிப்பது குறித்து விரிவாகக் கலந்துரையாடினார்.

தொடர்ந்து தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல் கட்சித் தலைவர்களை கொழும்பில் இன்று சந்தித்துப் பேசுவதுடன் நாளை திங்கட்கிழமை வன்னி சென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினரைச் சந்தித்துப் பேசவுள்ளார். (உ-60,10)



# தென்னிலங்கைச் சந்தைகளில் ஆயுதங்கள் தாராள விற்பனை

## தெற்காசிய நட்புறவு நிலையப் பணிப்பாளர் தகவல்

(கொழும்பு)

தென்னிலங்கைச் சந்தைகளில் ஆயுதங்கள் தாராளமாகக் கிடைக்கின்றதுடன்,கொழும்பு நகர வீதிகளிலும் சிறிய, பெரிய ஆயுதங்கள் தாராளமாகவே காணப்படுகின்றன.

இதனடிப்படையில், நோக்குமிடத்து விடுதலைப் புலிகளிட முள்ள ஆயுதங்களில் 42 சதவீதமானவை இராணுவக் களஞ்சியங்களில் இருந்தவையே என தெற்காசிய நட்புறவு சர்வதேச நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி ஜேம்ஸ் அற்புதராசா குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வியாழன் அன்று காலை கோல் ஃபேஸ் ஹோட்டலில் இடம்பெற்ற 'சிறிய ஆயுதங்களும் அதன் பாவனையும்' எனும் விடயம் தொடர்பான கருத்தரங்கில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கையில் நாடளாவிய ரீதியில் சுமார் 15 ஆயிரம் சிறிய ஆயுதங்கள் பாவனையில் உள்ளதாக ஊகிக்கப்படுகின்ற போதிலும் உண்மையான புள்ளிவிபரங்கள் எதுவும் இதுவரை கணிப்பிடப்படவில்லை எனினும், இங்கு பாவனையில் உள்ள சிறிய ஆயுதங்களில் 50 வீதமானவை அரசியல்வாதிகளிடமும் அவர்களது ஆதரவாளர்களிடமுமே உள்ளன.

இலங்கையில் தற்போது இரவு விடுதிகள், மதுபானசாலைகள், களியாட்ட விடுதிகள் போன்றவற்றில் சர்வசாதாரணமாக ஆயுதங்கள் காணப்படுகின்றன. எனினும், கடந்த தேர்தல் காலத்தில் வன்முறைகள் இடம்பெறவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. இது மிகவும் மகிழ்ச்சிக்குரிய ஓர் விடயமாகும் எனக் குறிப்பிட்டார். (உ-18)



கவிஞர் ச.வே.பஞ்சாட்சரத்தின் 'சின்னப் பாப்பா பாட்டு' நூல் வெளியீட்டு விழா நிகழ்வில், நூலின் முதற்பிரதியை மூத்த எழுத்தாளர் புத்தொளி ந.சிவபாதம் பெற்றுக்கொள்வதையும், அருகில் கலாநிதி கி.விசாகரூபன், நூலாசிரியர் சிற்பி சிவசரவணபவன் மற்றும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க சிரேஷ்ட உபசெயலர் அ.பஞ்சலிங்கம் ஆகியோர் இருப்பதையும் படத்தில் காணலாம்.



கோப்பாய் பிரதேச தமிழீழ மாணவர் ஒன்றியமும், எழுச்சிப் பேரவையும் ஒன்றிணைந்து அண்மையில் வாதரவத்தைக் கிராமத்திலுள்ள வறிய மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகளை அன்பளிப்புச் செய்தன. [illegible] மாணவர் ஒருவருக்கு பேரவையின் செயலாளர் ந.சிவகடாட்சம் அப்பியாசக் கொப்பிகளை வழங்குவதைக் காணலாம்.

படம்: எஸ்.ரி.விமலதாஸ்

## இத்தாலி செல்ல முற்பட்ட 269 பேருக்கு விடுதலை

(கொழும்பு)

வெசாக் பண்டிகை தினத்தையொட்டி விடுதலை செய்யப்படவுள்ள 1000 கைதிகளில், சட்டவிரோதமாக இத்தாலி செல்ல முற்பட்டவேளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு ஒரு வருட சிறைத்தண்டனை விதிக்கபட்ட 269 பேரும் அடங்குவதாக சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் புறூம் மர்சூத் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டவர்கள் தவிர்ந்த ஏனைய கைதிகளில் 1000 பேருக்கே பொது மன்னிப்பு வழங்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டிருந்தார் என சுட்டிக்காட்டிய ஆணையாளர் நாயகம், சிறிய குற்றங்களைப் புரிந்து குறுகிய கால சிறைத் தண்டனையை அனுபவித்து வருபவர்களில் இத்தாலி செல்ல முற்பட்ட 269 பேரும் அடங்குவதாகவும் குறிப்பிட்டார்.

இதேவேளை, சட்டவிரோதமாக இத்தாலி செல்ல முயன்றபோது பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இந்த 269 பேரையும் துரித விசாரணை செய்து விடுதலை செய்ய சட்டமா அதிபர் கமலசபேசன் ஏற்கனவே நடவடிக்கை எடுத்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-61,10)

## திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.திருமறைக் கலாமன்றத்தின் புனரமைப்புச் செய்யப்பட்ட புதிய பணியகம் இன்று நண்பகல் 12.00 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது. (உ)

# மத்திய மற்றும் ஊவா மாகாண சபைகளுக்கான தேர்தல்

## 14ஆம் திகதி முதல் வேட்பு மனுத்தாக்கல்

(கொழும்பு)

மத்திய மாகாண மற்றும் ஊவா மாகாண சபைகளின் தேர்தலுக்கான வேட்பு மனுக்களை எதிர்வரும் 14ஆம் திகதி முதல் கோரவுள்ளதாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த வேட்புமனுக்களை எதிர்வரும் 14ஆம் திகதி முதல் 21ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை அப்பகுதிகளுக்கான தெரிவத்தாட்சி அலுவலர்களிடம் தாக்கல் செய்ய முடியும்.

மத்திய மற்றும் ஊவா மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடவுள்ள சுயேச்சைக் குழுக்களின் தலைவர்கள் எதிர்வரும் 20ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை தமது கட்டுப்பணத்தை செலுத்த முடியும்.

இதன்படி மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில் 30 உறுப்பினர்களும், மாத்தளை மாவட்டத்தில் 10 உறுப்பினர்களும், நுவரெலியா மாவட்டத்தில் 16 உறுப்பினர்களும் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

ஊவா மாகாணத்திலும், பதுளை மாவட்டத்திலும் 21 உறுப்பினர்களும், மொனராகலை மாவட்டத்தில் 11 உறுப்பினர்களும் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

வேட்புமனுத்தாக்கல் செய்த பின்னரே தேர்தல் நடை பெறும் திகதி அறிவிக்கப்படும் என தேர்தல் செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-121)

## 6ஆம் திகதியன்று

# வடமேல் மாகாண சபையின் உறுப்பினர்கள் பதவிப் பிரமாணம்

(புத்தளம்)

அண்மையில் நடைபெற்று முடிந்த வடமேல் மாகாண சபைத் தேர்தலில் வெற்றி பெற்ற உறுப்பினர்கள் எதிர்வரும் 6ஆம் திகதி வடமேல் மாகாண ஆளுநர் முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொள்ளவுள்ளனர்.

கடந்த 24ஆம் திகதி நடைபெற்று முடிந்த வடமேல் மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, இரு பட்டியல் ஆசனங்கள் உட்பட 31 ஆசனங்களையும் ஐக்கிய தேசிய முன்னணி 19 ஆசனங்களையும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இரு ஆசனங்களையும் பெற்றுக் கொண்டன.

இந்த நிலையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு கிடைத்துள்ள இரு பட்டியல் ஆசனங்களில் ஒரு ஆசனம் குருநாகல் மாவட்டத்துக்கும் மற்றொரு ஆசனம் புத்தளம் மாவட்டத்திற்கும் வழங்கப்படவுள்ளது. (உ-15)

# இந்திய கிரிக்கெற் அணிக்கு

# கப்டனாக இருப்பது கடினமானது

## இருப்பினும் இளம் வீரர்களின் இருப்பு இதமளிக்கிறது-சௌரவ் கங்குலி

(புதுடில்லி)

**இந்திய கிரிக்கெற் அணிக்கு கபடனாக இருப்பது மிகக் கடினமானபணி எனத் தெரிவித்துள்ள சௌரவ் கங்குலி எனினும் இளம் வீரர்கள் நிறைய பேர் அணியில் இருப்பது தனது பணியை சுலபமாக்கியுள்ளதாக ஆசியா டுடேக்கு அளித்த பேட்டியில் அவர் மேலும் கூறிகையில்,**

கிரிக்கெற்றில் கப்டன் பதவியை வகிப்பதுதான் கடின மான பணி. இதை அசாரும் உணர்ந்திருப்பார். சச்சினும் உணர்ந்திருப்பார். இது கடினமான பணி தான் என்றாலும் மிகச் சவாலாகவும் இருக்கிறது.

கடந்த 2,3ஆண்டுகளாகவே ஆடு களத்தில் கடுமையாகப் போராடும் இளம் வீரர்கள் நமக்குக் கிடைத்துள்ளனர். அவர்கள் போட்டியிடுவதை போராடுவதை தடுக்கும் நபராக நான் இருந்ததில்லை. ஏனென்றால், அதுதான் வெற்றிக்கான வழி.

ராகுல் ட்ராவிட்டைப் பற்றி மக்கள் பேசுகிறார்கள். ராகுலை மிகவும் அமைதியானவர் என்கிறார்கள். அவர் ஆக்ரோசமானவர். கிரிக்கெற் மைதானத்தில் களத்தடுப்பு செய்தாலும் சரி, துடுப்பெடுத்து ஆடினாலும் சரி. எதிரணிக்கு இம்மியளவு கூட விட்டுத்தர மாட்டார். தற்போதைய அணியும் அப்படித்தான்.

பாகிஸ்தானுக்கு எதிரான வெற்றிகள் மிகமிகச் சிறப்பானவை. ஏனென்றால் நான் 1996ல் விளையாட ஆரம்பித்ததில் இருந்து வெளிநாட்டில் இந்தியா பெற்ற முதல் தொடர் வெற்றி இதுதான். உலகில் எந்தத் தொடருக்கும் சரி, அது அவுஸ்திரேலியா-இங்கிலாநது ஆஷஸ் தொடராக இருந்தாலும் சரி... இந்தியா-பாகிஸ்தான் தொடா அளவுக்குப் பெரிதான ஒன்றாகக் கருதப்படுவதில்லை.

இந்தியா-பாகிஸ்தான் தொடர் வெறும் கிரிக்கெற் சார்ந்தது மட்டுமல்ல. கிரிக்கெற் சாராதவர்களுக்கு ஏற்பட்ட ஆர்வம் ஏராளம்.

லாகூரில் நடைபெற்ற கடைசி இரண்டு ஒருதின ஆட்டங்களைக காண இந்தியாவிலிருந்து 12ஆயிரம் பேர் பாகிஸ்தான் வந்திருந்தனர்.

சிறப்பாக விளையாட ஓர் அணி



மீதான நிர்ப்பந்தமும் எதிர்பார்ப்பும் அதிகரிக்கிறது என்று கூறியுள்ளார்.

# விளையாட்டுச் செய்திகள்

## சிம்பாப்வே சுற்றுப்பயணத்தை இங்கிலாந்து நிராகரிக்கும்

சிம்பாப்வே அணிக்கெதிராக எதிர் வரும் ஒகரோபர் மாதம் மேற்கொளளவுள்ள இங்கிலாந்து அணியின் சுற்றுப்பயணத்தை நிராகரிப்பது தொடர்பாக இங்கிலர்ந்து அணியின் முன்னணித் துடுப்பாட்ட வீரர் கிரஹாம் தோப் ஆராய்ந்து வருகின்றார்.

சிம்பாப்வே ஜனாதிபதி றொபேட் முகாபேயின் மனிதாபிமானமற்ற நடவடிக்கைகளுக்கு எதிப்புத் தெரிவித்து தாம் இந்த தீர்மானத்தை எடுக்கவுள்ளதாகவும் கோப் கூறினார். கோப் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இங்கிலாந்து கிரிக்கெற் அணியினர் சுற்றுலாப்பயணம் மேற்கொள்ளப்போவதை தாம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை, தான் ஒரு கிரிக்கெற வீரர் என்பதால் இந்த சுற்றுப்பயணத்திற்கு செல்ல வேண்டி ஏற்படலாம். இந்தச் சுற்றுப் பயணத்தில் தான் வெல்வது குறித்து உறுதியாக கூற முடியாது.

கடந்த ஆண்டு நடைபெற்ற உலகக்கிண்ணக் கிரிக்கெற் போட்டியின் போது சிம்பாப்வே விளையாட இங்கிலாந்து அணி மறுத்திருந்தது.

இதேவேளை, அவுஸ்திரேலிய கிரிக்கெற் அணியின் மக்கில் சிம்பாப்வேக்கான அவுஸ்திரேலிய சுற்றுப்பயணத்தில் தான் இடம்பெறப் போதில்லை எனத் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.(உ-121,68)



**ஐந்தாவது இந்திய தொலைபேசி வாரம் புதுடில்லியில் வியாழக்கிழமை கொண்டாடப்பட்டது அப்போது பொபைல் செல்லிடத் தொலைபேசி நிறுவனம் ஒன்றின் விளம்பரத்துக்காக காட்சியளிக்கும் இந்தியக்கிரிக்கெற் நட்சத்திரங்கள் (இடமிருந்து) முகமது கைஃப் ,இர்ஃபான் பதான், சகீர் கான், ஹர்பஜன்சிங்.**

## ஐரோப்பாவின் நம்பர் I கதாநாயகன் ஷனடின் ஷடேன்

கடந்த 50ஆண்டுகளில் ஐரோப்பாவின் நம்பர்-1கால்பந்து வீர ராக பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஷினடின் ஷிடேன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். ஒருங்கிணைந்த ஐரோப்பிய கால்பந்து சங்கம் (யு.ஈ.எப்.ஏ) இந்த விருதுக்கான வாக்கெடுப்பை நடத்தியது. இதில் பெக்கன் பாயர், ஜோகன் குருய்ப் இருவரையும் பின்னுக்குத் தள்ளி ஷினடின் ஷிடேன் முதலிடத்தைப் பிடித்தார்.

பிரான்ஸ் நாட்டின் தேசிய அணிக்காக ஸ்பெயின் ரியல்மட்ரிட கழகத்திற்காக விளையாடிவரும் ஷினடின ஷிடேன் 1,23,582வாக்குகளைப் பெற்றார் யு.ஈ.எப்.ஏ.வின் அதிகாரப்பூர்வ வெப்சைட் நடத்திய வாக்கெடுப்பில ஷினடின் ஷிடேனுக்கு ஆதரவாக ரசிகர்கள் வாக்களித்துள்ளனர்.

1,22,509வாக்குகளுடன் ஜேர்மனியின் பெக்கன் பாயர் 2ஆம் இடத்திலும், 11,9,332வாக்குகளுடன் ஹொலண்டிங் ஜோஹன் 3ம் இடத்திலும் உள்ளனர்.

மர்கோவாஸ் பாஸ்டன் (ஹால்ந்து), டினோ ஷாப் (இத்தாலி), அல்பிர டோடி ஸ்டெபானோ, (ஸ்பெயின்), இயூசிபியோ (போர்த்துக்கல்), லெவ் யாசின் (சோவியத் யூனியன்), மிகேல் பிளாடினி (பிரான்ஸ்), பாவ்லோ மாலவனி (இத்தாலி) ஆகியோர் முறையே 4,5,6,7,8,9, 10ஆம் இடங்களைப் பெற்றுள்ளனர்.

முதல் 10வீராகளில் இடம்பெற்றிருப்பது என்பது மிகச்சிறநத விடயம் என்று மல்ரிட்டில் இருந்து யூ.ஈ.எப்.ஏவிற்கு அளித்த பேட்டியில் ஷிடேன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், கடந்த 50ஆண்டுகளில் மிகச்சிறந்த ஐரோப்பிய கால்பந்து வீரர்களில் முதலிடத்தைப் பிடித்திருப்பது அசாதாரணமானது என்றும் ஷிடேன் தெரிவித்தார்.

ஐரோப்பிய கால்பந்து கடடமைப்பில் 50ஆண்டு விழாவை ஒட்டி இந்த வாக்கெடுப்பானது நடைபெற்றது. 31வயதான ஷினடின் ஷிடேன் 1998ஆம் ஆண்டு உலகக்கோப்பை வென்ற பிரான்ஸ் அணியில் இடம் பெற்றிருந்தார்.

2002ஆம் ஆண்டு ஐரோப்பிய சம்பியன்ஷிப் பட்டத்தை வென்ற பிரான்ஸ் அணியிலும் ஷிடேன்



இடம்பெற்றிருந்தார். 2002ல் நடைபெற்ற சம்பியன்ஸ் லீக் இறுதிப் போட்டியில் பேயர் லெவர்குசன் அணியை 2:1என்ற கோல்கணக்கில் ரியல்மட்ரிட் அணி வீழ்த்தியது. இதில் ரியல்மட்ரிட் அணிக்கான வெற்றிக்கோலை ஷினடின் ஷிடேன் அடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

சர்வதேச கால்பந்து சங்கத்திற்கான சிறந்த வீரர் விருதையும் ஷினடின் ஷிடேன் வென்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.
(உ-121)

## சுண்டிக் குளியில் கரப்பந்தாட்டம

சுண்டிக்குளி சனசமூக நிலையம் தமிழ்ப் புத்தாண்டு திருநாளை முன்னிட்டு சுண்டிக்குளி வட்டாரத்திற்குள் உள்ள கழக அணிகளுக்கிடையில் நடாத்திவந்த 'ஓவர் வேகம்' முறையிலான கரப்பந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டமும் பரிசளிப்பு வைபவமும் கடந்த 25ஆம் திகதி மாலை மின்னொளியில் ரசிகர்கள் மத்தியில் நடைபெற்றன.

இறுதியாட்டத்தில் கிறீன் பீல்ட் விளையாட்டுக்கழக அணி அதனை எதிர்த்து ஆடிய கொய்யாத்தோட்ட விளையாட்டுக்கழக அணியை 2:1 என்ற செற்கணக்கில் 15:5, 3:15, 15:9 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று சம்பியன் கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது.

இவ் ஆட்டத்திற்கு நடுவராக ம.நாகேந்திரம் கடமையாற்றினார்.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட சம்மேளனத்தின் தலை வர் கப்ரின் டி.ஏ.குணசிங்கம் அவாகள் கலந்து கொண்டு வெற்றி பெற்றோருக்கான பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார். (யே-110)

## ஐ.சி.சி.கிண்ணத்திற்கான அடுத்த போட்டி அயர்லாந்தில்

2005ஆம் ஆண்டு சர்வதேச கிரிக்கெற் பேரவையின் ஐ.சி.சி. கிண்ணத்திற்கான கிரிக்கெற் சுற்றுப்போட்டியை அயர்லாந்தில் நடத்த தீர்மாணிக்கப்பட்டுள்ளது.

எட்டாவது முறையாக நடைபெறும் இந்த ஐ.சி.சி.கிண்ணப் போட்டியை நடத்துவதற்கான ஒப்பந்தத்தில் ஐஸீ.வியன் தலைவர் இஸான் மணியும் அதன் நிறைவேற்று அதிகாரி மல்கம் ஸ்பீட்டும அதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளனர்.

அயர்லாந்தின் டப்ளின் மற்றும் வெல்பெஸ்ட் ஆகிய நகரங்களிலேயே இந்தப் போட்டிகள் நடைபெறவுள்ளது. அயர்லாந்தின் இப்போட்டி நடத்தப்படுவதன் மூலம் அந்த நாட்டுக்கிரிக்கெற் துறை மேம்பாடையும் என அந்நாட்டின் கிரிக்கெற் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (உ-121)

# வன்முறை, முறைகேடுகள் நடந்த தொகுதிகளில் மறு வாக்குப்பதிவு?

ராஷ்ட்ரிய ஜனதாதள் தலைவர் லூலு பிரசாத் யாதவ், மத்திய அமைச்சர் ராஜ் பிரசாரத் மோடி ஆகியோர் போட்டியிடும் சாப்ரா மக்களவைத் தொகுதியில் மறு வாக்குப் பதிவு நடத்துவது தொடர்பாக விசாரணை அறிக்கை கிடைத்த பிறகே முடிவெடுக்கப்படும் எனத் தலைமைத் தேர்தல் ஆணையர் ரி. எஸ்.கிருஷ்ணமூர்த்தி கூறியிருக் கிறார்.

கொல்கத்தாவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கடந்த 26 ஆம் திகதி வாக்குப் பதிவு நடந்த நாளன்று, வன்முறையும் முறைகேடுகளும் நடந்ததாகக் கூறப்படும் புகார்கள் மீது நேரில் ஆய்வு செய்ய 2 உறுப்பினர் குழுவைத் தேர்தல் ஆணையம் அனுப்பியிருப்பதாகக் தெரிவித்தார்.

தேர்தல் பார்வையாளர்களின் அறிக்கை தேர்தல் ஆணையத்துக்கு ஏற்கெனவே கிடைத்திருப்பதாகவும், விசாரணைக் குழுவின் அறிக்கை கிடைத்தபிறகே இது பற்றி முடிவெடுக்கப்படுமென்றும் கிருஷ்ண மூர்த்தி தெரிவித்தார்.

சிறைக் கைதிகள் போட்டியிடும் தொகுதிகளில் தேர்தலை ரத்துச் செய்வது தொடர்பாக, பட்னா உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு குறித்துக் கருத்துத் தெரிவிக்க மறுத்த அவர், நீதிமன்றத்தின் உத்திரவு நகல் இன்னும் கிடைக்கவில்லையென்றும், அதற்கு முன்னதாகக் கருத்துத் தெரிவிக்க விருப்பவில்லை என்றும் கூறினார்.

கிரிமினல் குற்றவாளிகள் தேர்தலில் போட்டியிடுவதை தவிர்க்க முயன்றால் தேர்தல் ஆணையம் மகிழ்ச்சியடையும் என்று கூறிய அவர், உயர் நீதி மன்றத்தின் உத்தரவை ஆய்வு செய்த பிறகு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.(து)



வியாபார நன்னடத்தை குறித்து ஒவ்வொரு இந்தியனும் தெரிந்து கொள்ளத் தேவையானவை என்ற நூலை மும்பையில் கடந்த வியாழக் கிழமை வெளியிட்ட மிஸ் இந்தியா யுனிவர்ஸ் தனுஶ்ரீ தத்தா

# கருத்துக் கணிப்புகளை பொய்யாக்குவேன்

## முதலமைச்சர் ஜெயலலிதா சூளுரை

(சென்னை)

மக்களவைத் தேர்தலில் தமிழ் நாட்டில் தி.மு.க. தலைமையிலான



ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக்கு அமோக வெற்றிகிடைக்கும் என்ற கருத்துக் கணிப்புக்களைப் பொய்யாக்குவேன் என்று தமிழக முதலமைச்சரும் அ.இ.அ. தி.மு.க. பொதுச் செயலாளருமான ஜெயலலிதா சூளுரைத்துள்ளார்.

கருத்துக் கணிப்புகளில் தமக்கு எப்போதுமே நம்பிக்கை யில்லை என்று தெரிவித்த அவர், இது பற்றித் தாம் கவலைப்படவில்லை என்றார்.


தென் மாவட்டங்களில் தேர்தல் பிரசாரப் பயணத்தின் போது தனியார் தொலைக் காட்சியொன்றுக்குப் பேட்டியளித்த அவர், கருத்துக் கணிப்புக்களைத் தான் முன்பு பொய்யாக்கியது போல, இம்முறையும் செய்துகாட்டுவேன் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியின் வெளிநாட்டவர் என்ற பிரச்சினைதான் நாட்டை எதிர் நோக்கும் முக்கிய பிரச்சினை என்று கூறிய ஜெயலலிதா நம் நாட்டை இந்தியர் ஆளவேண்டுமா? வெளிநாட்டவர் ஆளவேண்டுமா என்பது தான் மிக முக்கியமான கேள்வி என்றார்.

(து)

# காங்கிரஸ் மீது வாஜ்பாய் குற்றச்சாட்டு

காங்கிரஸ் கட்சி தவிர வேறெந்தக் கட்சியும் மத்தியில் வெற்றிகரமாக ஆட்சி நடத்த முடியாது என்ற கருத்தைத் தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு முறியடித்



துள்ளது என்று பிரதமர் வாஜ்பாய் கூறியிருக்கிறார்.

ம்த்தியப் பிரதேச மாநிலத்தில் தேர்தல் கூட்டமொன்றில் பேசிய அவர் நாட்டில் நிலையான ஆட்சியைத் தரமுடியும் என்பதைத் தேசியஜனநாயகக் கூட்டணி அரசு நீரூபித்துள்ளது என்றார்.

கடந்த 6 ஆண்டுகளாக வெற்றிகரமான அரசாகத் தமது அரசு திகழ்ந்தது என்றும், நாட்டின் பொருளாதார நிலைமை வெகுவாக முன்னேறியது என்றும் குறிப்பிட்டார்.நாட்டின் அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சி ஏற்பட்டிருப்பதைக காங்கிரஸ்கட்சி ஏன் எதிர்க கிறது என்று வாஜ்பாய் வினவினார்.

தி.மு.கவை வன்மையாக எதிர்த்த காங்கிரஸ் தற்போது அக்கட்சியுடன் கூட்டணி அமைத்திருக்கிறது என்றும், கடந்த காலங்களில் அரசுகளைக் கவிழ்ப்பதிலேயே அக்கட்சி குறியாக இருந்தது என்றும் பிரதமர் குறிப்பிட்டார். (து)

# வாஜ்பாயே பிரதமராவார் அத்வானி நம்பிக்கை

பா.ஜ.கடசியே மீண்டும் ஆட்சிக்கு வருமென்றும், வாஜ்பாயே மீண்டும் பிரதமராகப் பொறுப் பேற்பார் என்றும் துணைப்பிரதமர் அதவானி கூறியிருக்கிறாா.

ராஜஸ்தான் மாநிலம் ஆள்வார் என்ற இடத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையில், கருத்துக் கணிப்பு முடிவுகள் எத்தகையதாக இருந்தாலும் பா.ஜ.க. மீண்டும் ஆட்சிக்கு வருவது உறுதி என்று குறிப்பிட்டார்.

அரசியலில் நிலையற்ற தன்மை நாட்டுக்கு உகந்தது அல்ல என்பதை உணர்ந்துள்ள மக்கள், பா.ஜ.கட்சியை மீண்டும் ஆட்சியில் அமர்த்துவார்கள் என்று அவர் கூறினார்.

எதிர்க்கட்சிகளின் கூட்டணி தலைமை இல்லாத அணியாக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (து)

# இந்தியச் செய்திகள்



தலையைப் பார்த்து முள்கிரீடம் என்று நினைத்து விடாதீர்கள் புது டிசைனாம்! டில்லியில் கடந்த வியாழக் கிழமை நடைபெற்ற 5 ஆவது இந்திய பஷன் வாரத்தில் தான் இந்தக் கோலம்!

# முன்னாள் அமைச்சர் இந்திரகுமாரி மீது 15.45 இலட்ச ரூபா ஊழல் வழக்கு

ரூபா 15.45 இலட்சம் ஊழல் செய்ததாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் முன்னாள் அமைச்சர் இந்திரகுமாரி உடபட 4 பேர் ஜூலை 21ஆம் திகதி ஆஜராக முதன்மை செசன்ஸ் நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

1991-1996 வரை அ.தி.மு.க ஆட்சியில் சமூக நலத்துறை அமைச்சராக இருந்தவர் இந்திர குமாரி. 1997 இல் அவர் உட்பட 4 பேர் மீது அரசு சார்பில் சி.பி.சி.ஐ.டி பொலிஸில் புகார் செய்யப்பட்டது.

சமூக நலத்துறை முன்னாள் செயலர் ஆர்.கிருபாகரன் ஐ.ஏ. எஸ், ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறையின் முன்னாள் இயக்குநர் டாக்டர் பி.சண்முகம், மெர்சி மதர் இந்தியா அறக்கட்டளையின் நிர்வாகி ஏ.பாபு ஆகியோர் மீது புகார் கூறப்பட்டது. இவர்களில் ஏ.பாபு, இந்திரகுமாரியின் கணவர் ஆவார்.

இந்திரகுமாரி உட்பட 4 பேரும் சேர்ந்து மெர்சி மதர் இந்தியா அறகட்டளை, பரணி சுவாதி கல்வி அறக்கட்டளை ஆகியவற்றை ஏற்படுத்தினர். இதன் மூலம் வேலூர் மாவட்டத்தில் காதுகேளாத குழந்தைகளுக்கும், சென்னையில் ஊனமுற்ற குழந்தைகளுக்கும் சிறப்புபள்ளி அமைக்க அவர்கள் திட்டமிட்டனர்.

இதற்காக அரசிடம் நிதி ஒதுக்கீடு பெற்றனர். ஆனால் இரு பள்ளிகளும் தொடங்கப்படவே இல்லை. இதனால் அரசுப்பணம் ரூபா 15.45 இலட்சத்தை தங்கள் சுயலாபத்துக்காகப் பயன்படுத்தியுள்ளனர் என்று புகாரில் கூறப்பட்டுள்து.

கிரிமினல் சட்டம் 120 பி, 409, 420 பிரிவுகளின் கீழும், ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழும் 4 பேர் மீதும் சி.பி.சி.ஐ.டி பொலிஸார் வழக்குப்பதிவு செய்தனர். (து)

## பீஹார் மாநிலத்தில் தேர்தல் முறைகேடு

பீஹார் மாநிலம் சாப்ரா மக்களவைத் தொகுதியில் தேர்தல் முறைகேடு நடைபெற்றுள்ளதாக வந்துள்ள புகார்கள் குறித்து விசாரிப்பதற்கு இரண்டு உறுப்பினர்கள் கொண்ட குழுவை அனுப்ப தலைமைத் தேர்தல் ஆணையம் தீர்மானித்துள்ளது.

இந்தத் தொகுதியில் ராஷ்ட்ரிய ஜனதா தள் தலைவர் லாலு பிரசாத் யாதவும் மத்திய சிவில் விமானப் போக்குவரத்துத் துணை அமைச்சர் ராஜு பிரசாத் மோடியும் போட்டியிடுகிறார்கள்.

கடந்த 26 ஆம் திகதி இந்தத் தொகுதிக்கு நடைபெற்ற வாக்குப் பதிவின் போது வாக்குச் சாவடிகள் கைப்பற்றப்பட்டதாகவும், முறைகேடுகள் நடைபெற்றதாகவும் புகார்கள் எழுந்தன.

இதனைத் தொடர்ந்து தலைமைத் தேர்தல் ஆணையம் இந்தக் குழுவை அமைத்துள்ளது. ஓரிரு நாட்களில் இந்தக் குழு விசாரணையை மேற்கொள்ளும்.

(து)

# தமிழ் நாட்டில் பதற்றம் நிறைந்த தொகுதிகள்

தமிழ் நாட்டில் மக்களவைத் தேர்தலில் பதற்றம் ஏற்பட வாய்ப்புள்ள தொகுதிகள், அவற்றின் முந்திய வரலாறு, அரசியல் பிரச்சினை மற்றும் வேட்பாளர்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கண்டறியப்படுமென்று தலைமைத் தேர்தல் அதிகாரி சாரங்கி தெரிவித்துள்ளார்.

மத்திய துணை இராணுவப் படைபபிரிவுகள் இத்தொகுதி களில அதிரடிப்படையாகவும் ரோந்துப் படையாகவும் ஈடுபடுத்தப்படுமென்று அவர் அறிக்கை யொன்றில தெரிவித்துள்ளார். மக்களிடம நம்பிக்கையை ஏற்படுத்துவதற்காக, தேவைப்பட்ட இடங் களில் காவல் படையினரின் கொடி அணி வகுப்புகளும் நடைபெறும் என்றும் அவர் கூறினார். நியாயமாகவும் சுதந்திர மாகவும் தேர்தல் நடைபெறுவதை உறுதி செய்ய மத்திய- மாநில சிறப்புப் படையினர் ஈடுபடுத்தப்படுவார்கள் என்றும் அவர் கூறினார். (து)

# குனிந்தும் பணிந்தும் போனது போதும் துணிந்தெழு!

கடந்த சில வருடங்களில், தமிழ்த் தேசிய உணர்வும், தமிழ் இன விடுதலைத் தாகமும் எவ்வளவு தூரம் தமிழர்களிடம் வளர்ந்துள்ளதோ அதேயளவு வேகத்தில், சிங்கள தேசிய உணாவும் சிங்கள இனத்துவேச உணர்வும் சிங்கள மக்களிடையே பலமடங்கு வளர்ந்துளளது. இதை தமிழ் மக்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் அவதானிக்க மறந்து விடக்கூடாது.

அண்மைக்காலமாக (கடந்த 2, 3 ஆண்டுகளில்) சிங்கள இனம், சிங்கள நாடு, சிங்கள மொழி, சிங்கள (பௌத்த) மதம் போன்றவற்றிற்கு பேராபத்து வந்துள்ளதாக தொடர்ச்சியாக சிங்கள இனவாதிகள் எழுதியும் பேசியும் காட்டியும் திணித்தும் அழுத்தியும் வந்ததனால் மட்டுமல்ல, தமிழினத்தில் தானாக வளர்ந்து வந்துள்ள தமிழின விடுதலை வேகமும் அவர்களை எதிர்த்திசையில் செல்வதற்கும் சிந்திப்பதற்கும் வழியமைத்துக் கொடுத்துள்ளன.

சிங்கள ஊடகங்கள் தங்கள் இனத்திற்குச் செய்யும் தேசியப் பணி

உதாரணத்திற்காக, சென்ற வாரம் சிங்களப் பத்திரிகையில் வெளிவந்த மிகப்பெரிய இனத்துவேசக் கட்டுரையின் இறுதிப் பகுதியிலிருந்து, தமிழ் மொழி பெயர்க்கப்பட்ட ஒரு சில வரிகளை இங்கே பார்க்கலாம்

(இந்த எதிர்ப்பைச் சமாளிப்பதற்கு, பிரபாகரனுக்கு எதிரான கொள்கை கொண்ட தமிழர்களான டக்ளஸ் தேவானந்தா, ஆனந்தசங்கரி, கேணல் கருணா போன்றவர்களை ஆதரிக்க வேண்டும். அதற்கான காலக்கெடு மிகவும் பிந்திவிட்டாலும், நாம் இவர்களை ஆதரிப்பதும் பாதுகாப்பதும் மிகவும் அவசியமானது. அதனால், இந்தப் பிரபாகரனின் எதிரணியைப் பலப்படுத்துவதுடன், வடக்கும் கிழக்கும் தனித்தனி அலகாகப் பிரிக்கப்பட்டு, அதிகமான உரிமைகளை இவற்றிற்கு வழங்குவதன் மூலமே, தமிழர்களுக்கு வடக்கும் கிழக்கும் இணைந்த தன்னாட்சி அதிகாரத்தையோ உரிமையையோ கொடுப்பதைத் தடுக்க முடியும். இதை நாம் செய்யத் தவறினால், சூரியக் கடவுளிடமிருந்து எமது நாட்டைக் காப்பதற்கு மீதமுள்ள அற்பசொற்ப வாய்ப்பையும் நாம் இழக்க நேரிடும்.)

**குறிப்பு:** சூரியக்கடவுள் என்ற பொதுவான பதத்தை சிங்கள எழுத்தாளர்கள் பிரபாகரனுக்கான புனைபெயராகப் பாவித்து வருகிறார்கள்.

இதுபோன்ற கட்டுரைகளும், காரசாரமான இனத்துவேச உணர்வுகளும் தொடர்ச்சியாக சிங்கள மக்களுக்கு விதைக்கப்பட்டு உணர்வூட்டப்பட்டு, வருவதை தமிழர்கள் அவதானிக்காமலிருப்பது வேதனைக்குரியது.

இது போன்றே லக்ஷ்மன் கசிர்காமர் உட்பட. எனைய பிரிந்துபோன சிறிய இயக்கங்கள், அமைப்புக்களையும் சிங்கள பிரதேசவாதத்தை ஆதரவளிக்கும் தனிநபர்களையும், உற்சாகமூட்டி வளர்த்து வருவதுடன், அவர்களை வளர்த்தெடுக்கும்படி அரசுக்கும் அழுத்தம் கொடுத்து வருகின்றன.

**தற்போது நாம் எங்கே நிற்கிறோம்?**

இவர்களை இனம்கண்டு அழித்தொழித்த முதற்கட்டம் இப்போது அவசியமற்றதாகிவிட்டது. அதன்பின் உருவான இரண்டாம் கட்டத்தில், பலரும் தாங்களாகவே நிலைமையைப் புரிந்துகொண்டு தமிழ்த் தேசியத்தின் அவசியத்தை உணர்ந்து வலியுறுத்துவதுடன் இணைந்து செயற்படவும் ஆரம்பித்தார்கள். இதன் அறுவடையாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட மலையகக் கட்சிகளும் மேல்மாகாணக் கட்சிகளும் இணைந்து செயற்பட இணக்கம் கண்டன. தமிழ் மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சிகள் கூட, இத்தகைய இணக்கப்பாட்டைக் கண்டு, இணைந்து செயற்பட்டாலும், பின்னர் உருவான பதவி மோகம் காரணமாக, கருத்து மோதல்களை வளரவிட்டன. இருந்தாலும், இப்போது மீண்டும் தேசியத் தலைமையுடன் ஒருமித்து செயற்படுவதற்கான சமிக்ஞைகளைக் காட்டி வருவதை அவதானிக்க முடிகிறது.

**மூன்றாவது கட்டம்**

இந்த இரண்டாவது கட்டம் அண்மையில் இடம்பெற்ற பொதுத்தேர்தலின் பின்னர் நிறைவடைந்து, இப்போது மூன்றாம் கட்டத்திற்குள் நாம் அடியெடுத்து வைத்திருக்கிறோம். இது மிகவும் பக்குவமும் பரபரப்பும் (Sensitive) நிறைந்த ஒரு கட்டம். இது வெற்றிக்கு முன்னதான இறுதிக் கட்டமும் கூட. இங்கே மீண்டும் நாம் இழுபறிகளை அடிமட்டத்திலிருந்து ஆரம்பிக்க முடியாது. மிகுந்த சிரமங்களிடையே, பலவற்றை இழந்து, அத்திவாரமிட்டு, கட்டிடம் எழுப்பி, கூரைவேய்ந்து விட்டோம். அவற்றையெல்லாம் முடித்துக்கொண்டு, இப்போது மேலதிக அழகுபார்க்கும் (Cosmetic) வேலைகளில் இறங்கியுள்ளோம். தொடர்ந்தும் களையெடுப்பிலேயே நாம் நிற்கமுடியாது. கட்டங்களைத் தாண்டி வந்து விட்டோம். கனமான ஓர் தமிழினப் பின்னலை உறுதியாக அமைத்துக் கொள்வதிலும் நாம் வெற்றி கண்டு விடுவதே எமக்கு இப்போது எஞ்சியிருக்கும் பணி.

**அனுபவிப்பது மட்டும்தானா எமது பணி?!**

போராட்டக் களத்தையும், தமிழின வெற்றிக்கான நியாயப்பாட்டையும் எமது தேசியத் தலைமை வலுவாகவே அமைத்துத் தந்திருக்கிறது. 'முடிவு வரை அவரே இழுத்துச் செல்லட்டும், முடிந்ததும் நாம் பாட்டுப் பாட வருவோம்' என்றிருக்காது, இந்த மூன்றாம் கட்டத்திலாவது அனைத்துத் தமிழினமும் இணைந்து இழுத்து விட்டால், தோணி வேகமாகக் கரையேறிவிடும். பாட்டுப்பாட வரும்படி இங்கே குறிப்பிடுவது, இப்போதும் தமிழின உணர்வை இழந்து, எதிரிப்படைகளுக்கு வக்காலத்து வாங்கும் எஞ்சியுள்ள ஓரிரு பிறவிகளையும் இலட்சியம் நோக்கிய பயணத்தில் இணைத்துக் கொள்வதையே. தொடர்ந்தும் தொடர்ந்தும் இவர்களோடு போராடும் அவசியமில்லை. இவர்கள் வேண்டுமென்றே விதண்டாவாதம் செய்கிறார்கள் என்பது புரிகிறது. அதனால், அறிவுசார் தமிழினத்திடம் தக்கவோர் பணி காத்துக்கிடக்கிறது.

புத்திஜீவிகள் இவர்களுடன் பேசி, ஒரு இணக்கப்பாடு காணவேண்டும். இவர்கள் நோயாளிகள், மன நோயாளிகள், உளவியல் பாதிப்பிற்குள்ளான சுகவீனமுற்ற இருதயம் கொண்டவர்கள். இவர்கள் தங்கள் கொள்கைகளைத் தாங்களே சந்தேகிக்கும் அதேவேளை, அடுத்தவர் கொள்கைகளை அடிப்படையிலேயே ஒட்டுமொத்தமாய் நிராகரிக்கும் பழக்கமுள்ளவர்கள். ஒரு சந்தர்ப்பத்தில் இவர்களுக்கு ஏற்புடையது போன்று தோற்றும் ஒரு கொள்கை, மறுகணமே உருமாறி, முற்றாய் மறுதலிக்கப்படும் பழக்கம் இவர்களது நிரந்தர வருத்தம்.

இதற்கு மருந்து செய்ய புத்திஜீவிகள் முன்வரவேண்டும். ஈழத் தமிழினம் இப்போது கடப்பது மூன்றாவது கட்டம். இதுதான் இறுதிக் கட்டமும் கூட. நான்காவதாய்த் தோன்றவுள்ளது 'விடுதலை' பெற்ற தென்னாபிரிக்க கறுப்பினத்தை ஒத்த சுய ஆட்சியிலமைந்த சுதந்திர காலம். அதற்குமுன் நாம் கடக்கும் இந்த மூன்றாம் கட்டத்தில், புல்லுருவிகள் புனரமைக்கப்பட வேண்டுமேயொழிய, களையெடுக்கும் பணி இனி அவசியமில்லை.

**ஒரு குடையின் கீழ் செயற்படும் அவசியம்**

களையெடுக்கும் இரண்டாம் கட்டப்பணி கிட்டத்தட்ட முடிவடைந்து விட்டது. வழிநடத்தும் ஒருவன் என்ற நிலை மாறி, தலைவன் என்று உருவாகி, தனியாக எம்மை வழிநடத்தி, அவதாரமாய் இன்று மூன்றாம் நிலைக்குள் புகுந்துள்ள எம் தேசியத் தலைமையைப் பலப்படுத்த, ஒரு குரலாய் எழுந்துநிற்பது எமக்கெல்லாம் இப்போது, கொடுக்கப்பட்டுள்ள வரலாற்றுப் பணி. இது இறுதிப் பணியும் கூட.

குனிந்தும் பணிந்தும் முதற்கட்டத்தைக் கடந்து போனோம். இனவாதப் பேய்கள் தமிழினத்தைக் களையெடுத்த போதும், கூசாமல் பதவியிலும் மமதையிலும் பட்டங்களிலும் புகழிலும் கூரையிலே வாழ்ந்து தொலைத்த அந்த 'உயர்ந்த' தமிழர்கள் இன்று காணாமற் போய்விட்டார்கள், காரணம்: காலத்தையொட்டிய ஒரு தொலைநோக்குப் பார்வை அங்கே காணப்படவில்லை, தமிழினத்தின் விடிவு நோக்கிய தூய பயணத்திற்குப் பாதையெதுவும் செப்பனிடப்படவில்லை, தனியே தங்கள் தங்கள் பாதைகளை மட்டும் பதனிட்டு செழுமைப்படுத்திய 'உயர்ந்தவர்கள்' தமது வாழ்வை மட்டும் செழுமைப் படுத்திக்கொண்டு ஓரம்கட்டி விட்டார்கள்.

'அம்மா அப்பா சொற்கேட்டு, ஆறு மணிக்குள் வேலிக்குள் அடங்கிப்போகும் ஈனத்தமிழினம் இது' என்று பேரினவாதம் எக்காளமிட்டு மகிழ்ந்தபோது, இளையதுகள் சில இலவங்காட்டு மரங்களிடையே ஒளிததிருந்து ஈழத்தமிழினத்தை மீட்டெடுக்கும் கோலம் போட எங்கே முதற்பொட்டு வைப்பதென்று வட்டமேசை மாநாடு நடாத்தினர். அதன் விழுதுகளையும் எச்சங்களையுமே நாம் இன்று வெற்றிக் கனிகளாக வடக்கிலும் கிழக்கிலும் 'இடுப்பில் கறுத்தப் பட்டியுடன்' காண்கிறோம்.

**சரி, தற்போது தரப்பட்டுள்ள பணிதான் என்ன?**

தேசியத் தலைமையே முடிவையும் பார்த்துக் கொள்ளட்டும் என்று வாளாவென்றிராமல், புத்திஜீவிகள் தங்கள் அறிவுசார் பணியை முடுக்கிவிட முன்வரவேண்டும். விரிவுரையாளர்கள், நீதிபதிகள், சட்டத்தரணிகள், தத்துவாசிரியர்கள், அதிபர்கள், ஆலோசகர்கள், கல்விமான்கள் அனைவரும் ஒன்றிணைந்து, தமிழினத்தை ஒரு குடையின் கீழ் தொடர்ந்தும் பேணுவதற்கான சில உறுதியான கட்டுமானப் பணிகளை ஆராய்ந்து நடைமுறைப்படுத்த முன்வரவேண்டும்.

குயின்ரஸ் துரைசிங்கம்
ரொறன்ரோ - கனடா

இப்போதும் ஒரு தலைமையின் கீழ் தமிழின விடுதலையை வென்றெடுக்க ஒத்துழைப்போ இணக்கமோ தர மறுக்கும் ஒவ்வொரு நபருடனும் நீண்ட விவாதக் களங்களை உருவாக்கி, அவர்களும் ஒரு குடையின் கீழ் வருவதற்கான தேவையை நியாயப்படுத்த வேண்டும். இந்தப் பணி இலகுவானதல்ல, ஆனால் இயலுமானதே. சர்வதேச தமிழ் அறிஞர்களும் இதற்கான தங்கள் பணியை ஆரம்பிக்க வேண்டும். தமிழினம் ஒரு குடையின் கீழ் செயற்படுவதற்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ ஒரு எதிர்க்காரணியாக செயற்படும் தனிநபர்கள், ஊடகங்கள், அமைப்புக்களை அணுகி, தற்போதைய அவசியத்தை நியாயப்படுத்த வேண்டும்.


இத்தகைய ஓர் அணுகுமுறையைப் பாவித்து வெற்றிபெற்ற சில தலைவர்களை அண்மைக்கால வரலாறுகள் கோடுபோட்டுக் காட்டுகின்றன. ரஷ்யாவில் ஒரு கொர்பச்சேவ், தென்னாபிரிக்காவில் ஒரு நெல்சன் மண்டேலா, பாகிஸ்தானில் ஒரு முஷ்ர.்.ப் என்று இந்தப் பட்டியல் நீண்டு செல்லும். நாட்டின் அறிவுசார் நல்லுலகம் தங்களது ஆக்கபூர்வமான செயற்பாட்டில் இறங்கியதன் மூலம், தங்களது வெற்றியை விரைவாக வென்றெடுத்து வெற்றி பெற்றவர்கள் இவர்கள்.

எல்லாவற்றையும் தேசியத் தலைமை மட்டுமே செய்யட்டும், நாம் பின்னர் அனுபவிப்போம் என்ற நிலை மாறி, இந்த மூன்றாம் கட்டத்தில், அனைத்துத் தமிழினமும் செயற்பாட்டில் இறங்க வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கீழ், அனைத்து தமிழ் அரசியல்வாதிகளையும் ஒரு குடையின் கீழ் கொண்டுவருவதில் தலைமை வெற்றி கண்டுள்ளது. இப்போது பல சிறுபான்மைக் கட்சிகளையும் ஒன்றிணைக்கும் பணி ஆரம்பிக்கப் பட்டுள்ளது. இதுபோன்றே, ஆங்காங்கே அரைமனத்துடனும், அரைவிருப்புடனும் அல்லது பாராமுகத்துடனும் இருக்கின்ற மீதித் தமிழரையும், குறிப்பாக, தமிழின விடுதலைக்கெதிராக தனிக்கொடி தூக்கும் அல்லது தூக்க முயற்சிக்கும் தமிழர்களையும் தொடர்ச்சியாக அணுகி, உறுதியான விவாத மேடைகளை உள்வாங்கி, தமிழினம் ஒரு குடையில் திரண்டு நிற்கவேண்டிய அவசியத்தையும், காரணங்களையும், இப்படி ஒன்றாக அணிதிரண்டு நிற்பதன் மூலம் ஈற்றில் கிடைக்கப்போகின்ற பயன்பாடுகள் பெறுபேறுகள் பற்றியும் சீராகக் கற்பித்தல் செய்ய வேண்டும்.

இதுபோன்றே, ஈழத்திலும் புலம்பெயர் நாடுகளிலும், ஒரு தலைமையின் கீழ் ஒன்றாகி நிற்கின்ற நிலைப்பாட்டை எடுக்கப் பின்நிற்கின்ற தனிநபர்களும் ஊடகங்களும் அமைப்புக்களும் கூட, தாங்களாகவே தங்கள் நிலைப்பாடுகளை மீள்பரிசீலனை செய்து, புதிய மாற்றங்களை உள்வாங்கி, 'போனவை போகட்டும்' என்ற உணர்வோடு, 'இனிவரும் இனிவரும் காலங்கள், எங்களின் காலங்கள்' என்ற உணர்வை உறுதியோடு பற்றிக்கொண்டு, தேசியத் தலைமையின் கரங்களைப் பலப்படுத்த ஒன்றாய் அணிதிரள்வோம்.

# போட்டி பொறாமைகளை மறந்து இயேசுவின் சீடர்களாய் வாழ்வோம்

இவ்வுலகிலே பலர் பிறக்கிறார்கள், வாழ்கின்றார்கள், இறக்கின்றார்கள் ஆனால் எல்லோரும் மக்கள் மனங்களிலே இடம் பிடித்துவிடுவதில்லை. எல்லோரையும் மக்கள் நினைவு கூர்வதுமில்லை.



மனித சமூகத்துக்கு அளப்பரிய சேவை செய்தவர், மனித சமூகத்தை அழிவுப்பாதையில் நின்று காப்பாற்றியவர், மனித சமூகம் வாழ்வாங்கு வாழ வழிகளைக் கற்றுத்தந்தவர்கள் இருந்தாலும் அவர்களின் பணிகள் வாழ்ந்து கொண்டே இருக்கின்றன.

மனுக்குலத்தை மீட்டு இரட்சிக்கவேண்டும் என்ற ஒரே இலட்சியங்களுக்காகவே கிறிஸ்து பெருமான் மண்ணுலகில் அவதரித்து, வாழ்வாலும் வார்த்தையாலும் வாழ்ந்து காட்டிச் சென்றார். தமது இன்னுயிரையும் மனுக்குல இரட்சிப்புக்காகவே கையளித்தார்

மனுமகன் பாவிகளிடம் கையளிக்கப்படவும் பாடுகள் பட்டு சிலுவையிலே அறையுண்டு மரித்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுவார் என்பதை யேசுதாமே தம் சீடர்களுக்கு பல தடவைகள் கூறியிருந்தார். ஆனாலும் சீடர்கள் உடனே அவரை நம்பவில்லை. இயேசுவின் இறப்பின் பின்பு அவர்கள் பயந்த நிலையிலே அறைக் கதவுகளைப் பூட்டிவைத்து கொண்டே இருந்தனர்.

### உயிர்ப்பால் உறுதி பெற்ற சீடர்கள்

இயேசுவின் இறப்பானது சீடர்கள் மத்தியில் அதைரியத்தை ஏற்படுத்திருந்தது. இயேசுவின் உடலை கல்லறையில் சென்று

## பரமபிதா காட்டிய பாதை

பார்தத போது உடல் அங்கே இல்லை. அவர் உயிரோடு இருக்கையிலே தாம் மூன்றாம் நாள் உயிர்ப்பேன் என்று கூறிதைச் சீடர்கள் நம்பவில்லை. அவரது உடலை யாரோ திருடி இருக்க வேண்டும். உடல் இருந்தால்தானே உயிருடன் எழமுடியும் என்று அவர்கள் நினைத்திருக்கலாம். சீடர்களின் சந்தேகத்தைப் போக்கவும் சீடர்கள் தமக்கு சாட்சியம் பகரவும் நற்செய்தியை போதிக்கவும் வேண்டும் என்பதற்காகவும், இயேசு உயிர்த்த எட்டாம் நாள் சீடர்கள் அறைகளைப் பூட்டிவைத் திருக்கையில் இயேசு நடுவே வந்து "உங்களுக்குச் சமாதானம்" என்றார். தமது கைளையும், கால்களையும் விலாவின் காயங்களையும் சீடர்களுக்கு காண்பித்தார். சீடர்கள் அச்சத்தாலும், மகிழ்ச்சியாலும் நிறைந்து போயிருந்தனர்.

### பேறு பெற்ற விசுவாசம்

எம்மிலே பலர் மற்றவர்கள் கூறுவதை இலகுவாக நம்பமாட்டார்கள. கண்ணாலே பார்த்து, கையாலே தொட்டுணர்ந்தாலே நம்புவர். இப்படியானவர்களை மற்ற மனிதர்கள் ஏற்றுக்கொள்வது மிகவும் அரிதாகும். ஆனால் அவர்கள் காண்பது உண்மை என்று அறிந்தால் அவர்களே அதற்குவிளம்பரம் செய்வார் கள் என்பதை நாம் கண்டுள்ளோம்.

இயேசுவின் சீடர்களுக்குளளேயும் தோமையார் என்பவர் எதையும் கண்டாலன்றி மற்றவர்கள் கூறியதை நம்பாதவர். முதல்முறை இயேசு சடர்களுக்கு காட்சியளித்த போது தோமையார் அங்கு இல்லை. ஆனால சீட்கள் இயேசுவைக் கண்டோம் என்று கூறியதை நம்பவில்லை. யேசுவின் காயங்களில் எனது விரல் களை விட்டுப் பார்க்காமல் நம்ப மாட்டேன் என்றார். எட்டுநாளின்பின் இயேசு மீண்டும் சீடர்கள் நடுவே தோன்றினார். தோமையார் இயேசுவைக் கண்டார். "என் ஆண்டவரே என் கடவுளே" என்று விசுவசித்தார். இயேசு சொன்னார் தோமையாரே "என்னைக் கண்டதால் விசுவாசம் கொண்டாய் காணாமல் விசுவசிப்போரே பேறு பெற்றோர்' (யோவான் 20:29) என்று கூறினார். பின்னர் சீடர்களுக்கு நற்செய்தியைப் போதிக் கவும், பாவங்களை மன்னிக்கவும், நோய்களைக் குணமாக்கவும் வல்லமையும் அதிகாரமும் அளித்து அனுப்பி வைத்தார்.

### அப்போஸ்தலர்களின் சாட்சியமும் எமது பணியும்

இயேசுவின் வார்த்தையைப் பின்பற்றி புனித பேதுரு தலைமையில் திருச்சபை ஆரம்பமாகி, நற்செய்திப் பணியாற்றியது. இன்றுவரை அப்பணி தேர்ந்து கொள்ளப்படும் வாரிசுகள் மூலம் வழிநடத்தப் படுகின்றது. இன்றைய தலைவராக இருபபவரே புனித பாப்பரசர் யோண் போல். தூய ஆவியானவரே திருச்சபையைப் புனிதப் படுத்தி வழி நடத்திவருகின்றார். எனவே கிறிஸ்துவின் உயிர்ப்புக்கு அப்போஸ்தலர்கள் சாட்சியம் பகர்ந்தார்கள். உலகெங்கும் நற்செய்தியைப் பறைசாற்றினார்கள்.

இயேசுவின் நாமத்தினாலே திருமுழுக்கு பெற்ற நாம் ஒவ்வொருவரும் இயேசுவின் சாட்சிகளாகத் திகழவேண்டும். முதலில் போட்டி பொறாமைகளை மறந்து "ஒருவர் ஒருவர் மீது அன்பு கொண்டால் தான் நீங்கள் என்சீடர்கள் என்பதை மற்றவர்கள் காண்பார்கள்" என்றார் இயேசு. எமது வாழ்வு எப்படியானது? ★

**செல்வமகள் நிலக்ஷி**

## சிறுவிளம்பரம்

### ஆங்கில வகுப்புக்கள்

சகல தரப்பினருக்குமான ஆங்கில வகுப்புக்கள் நடைபெறுகின்றன. ஆரம்பமாகும் புதிய வகுப்புக்களுக்கு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். தொடர்

Mr.P. VAA SAVAN, Poonary Lane, Kokuvil West Kokuvil, Jaffna. T.P 071-2500764 (C-161)

### கொடுக்கல் வாங்கல் நேரம் நீடிப்பு

(ஊர்காவற்றுறை)

மக்கள் வங்கியின் ஊர்காவற்றுறைக் கிளை வாடிக்கையாருடனான கொடுக்கல் வாங்கல் நேரத்தினை மீண்டும் மாற்றியுள்ளது.

கடந்த புதன்கிழமை தொடக்கம் வாடிக்கையாளருடனான கொடுக்கல் வாங்கல் நேரத்தினை காலை 9 மணி முதல் 1.30 மணி வரை அதிகரித்துள்ளது.

முன்னர் காலை 9 மணிமுதல் நண்பகல் வரை மட்டுமே இவ் வங்கியில் கொடுக்கல் வாங்கல் சேவை இடம்பெற்றதும் இதனால் வாடிக்கையாளர் சிரமங்களை எதிர் கொண்டதும் குறிப்பிடத்தக்கது. (உ-75)

### கருணா அணியினர்க்கு இருவார விளக்கமறியல்

(மட்டக்களப்பு)

காத்தான்குடிப் பொலிஸ் சோதனைச் சாவடியில் வைத்துக் கடந்த மாதம் 30 ஆம் திகதி கைது செய்யப்பட்ட கருணா அணியைச் சேர்ந்த நால்வரையும் மேலும் இருவராங்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை பலத்த பாதுகாப்புடன் இவர்கள் நீதிமன்றத்திற்கு அழைத்து வரப் பட்டனர்.

இவர்கள் பிரயாணம் செய்த வாகனத்தை 7 இலட்சம் ரூபா பிணையில் விடுவித்த நீதவான் இந்நால்வரையும் எதிர்வரும் 14 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவிட்டார். (உ-61,8)

# விசேட காலாட்படை பயிற்சி முடித்து 92 பேர் வெளியேற்றம்

(பலாலி)

யாழ்.குடாநாட்டில் நிலை கொண்டுள்ள நிரந்தர படைப்பிரிவில் இருந்தது தெரிவு செய்யப்பட்ட இராணுவ வீரர்கள் விசேட காலாட்படை பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறியுள்ளார்கள்.

இந்தப் பயிற்சித் திட்டத்தின் கீழ் 5 வது கட்டமாக ஆரம்பிக்கப்பட்ட பயிற்சியில், அதிகாரிகள் தரத்தைச் சேர்ந்த 6 பேரும் சாதாரண சிப்பாய்கள் 86 பேரும் பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறும் நிகழ்வு நேற்று முன்தினம் வசாவிளான் ஆசிரியர் பயிற்சி கலாசாலை மைதானத்தில் மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபாலவின் தலையில் இடம் பெற்றது.

இந்தப் பயிற்சி நெறியில் யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டுள்ள முதலாவது சிங்கரெஜிமென்ட், 6,7,8 சிங்கரெஜிமென்ட், 9,10,14 சிங்கரெஜிமென்ட், முதலாவது கெமுனு படைப்பிரிவு மற்றும் 4,6,8, கெமுனு படைப்பிரிவினர் 1,5,7, விஜேபாகு படைப் பிரிவு 6 வது கஜபா படைப்பிரிவு போன்ற படைப்பிரிவுகளில் இருந்து தலா 9 பேர் வீதம் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு 4வது சமிக்ஞை பிரிவு, 6 பொறியியல் பிரிவு, பலாலி ஆதார வைத்திய சாலை, பலாலி விமானப்படை போன்றவற்றில் பயிற்சி வழங்கப்பட்டு பின்பு மின்னேரியாவில் குறிபார்த்து சூடும் பாடசாலை, தியதலாவ, மாதுரு ஓயா, விசேட படை முகாம் மற்றும் கிமான்டோ, ஊவா பகுதியில் அமைந்துள்ள குடாஓயா, போன்ற பயிற்சி முகாம்களில் பயிற்சி வழங்கப்பட்டுள்ளன.

2003 ஆம் ஆண்டு டிசம்பர் 22 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பயிற்சி நெறி 2004 ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி முடிவடைந்தது. இந்தப் பயிற்சிகளை சிறந்த முறையில் பயின்று முடித்தவர்களுக்கு விசேட சான்றிதழ்கள் நேற்று முன்தினம் யாழ். மாவட்ட இராணுவத் தளபதியால் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்டத்தில் பணிபுரியும் சேனாதிபதி மற்றும் படையணியின் கட்டளை அதிகாரிகள் இராணுவ வீரர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### வெள்ளி விழா

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் வெள்ளி விழா இன்று மாலை 5 மணிக்கு சாவகச்சேரி நவீன சந்தையின் மேல்மாடியில் நடைபெறவுள்ளது.

கழகததலைவர் லயன்வீ.நாகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் லயன்ஸ் கழகங்களின் சர்வதேச தலைமையகத்தின் முன்னாள் பணிப்பாளர் லயன் விஜயநாதன் பிரதம விருந்தினராகவும், மாவட்ட உதவி ஆளுநர் லயன் எஸ்.சிவானந்தன் சிறப்பு விருந்தினராகவும் பங்கேற்கவுள்ளனர்.

இவ் விழாவில் கழகத்தில் 25 வருடங்கள் தொடர்ச்சியாகப் பணியாற்றிய உறுப்பினர்கள் கௌரவிக்கப்படவுள்ளதுடன், புதிய 7 உறுபபினர்களுக்கான பதவி வழங்கலும் இடம்பெறும். வெள்ளிவிழா மலரும் இங்கு வெளியிடப்படும் என லயன் கே.சற்குணதேவன் தெரிவித்தார். (உ-16)

# சங்கானை பி.செயலர் பிரிவு ஆஸ்பத்திரிகளில் கடந்த 3 மாதங்களில் 36,689 பேர் சிகிச்சை

(சுதுமலை)

சங்கானை பிரதேச செயலர் பிரிவில் மட்டும் கடந்த முதல் காலாணடில் சுமார் 36 ஆயிரத்து 689 பேர் நோய்களுக்குச் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இப்பகுதி அரசினர் வைத்திய சாலைகளான சங்கானை அரசினர் வைத்தியசாலை, வட்டுக் கோட்டை கிராமிய வைத்தியசாலை, வட்டுக் கோட்டை மத்திய மருந்தகம், சுழிபுரம் அரசினர் வைத்தியசாலை ஆகியவற்றின் வெளிநோயாளர் பிரிவிலேயே இத்தொகையினர் சிகிச்சை பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதில் 2 ஆயிரத்து 445 பேர் காய்ச்சலிற்கும், 68 பேர் வயிற்றுளைவு நோய்க்கும், 22,பேர் நெருப் புக்காய்ச்சலிற்கும், 261 பேர் நாய்க் கடிக்கும், 7 பேர் மலேரியாவுக்கும் சிகிச்சை பெற்றுளளதாக வைத்தியசாலைப புள்ளிவிபர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சங்கானை அரசினர் வைத்தியசாலை மற்றும் வட்டுக் கோட்டை கிராமியவைத்தியசாலைகளில் 71 பிரசவங்கள் நடைபெற்றுள்ளதாகவும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-252)

# கொடுப்பனவை வழங்காது பவ்ரல் அமைப்பு இழுத்தடிப்பு

(யாழ்ப்பாணம்)

ஏப்ரல் 2ஆம் திகதி நடைபெற்ற பாராளுமன்றப் பொதுத் தேர்தலின் போது யாழ்ப்பாண மாவட்டத்தில் பவ்ரல் அமைப்பினால் கண் காணிப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்ட 400க்கு மேற்பட்டோருக்கான கொடுப்பனவுகள் இதுவரையும் வழங்கப்படவில்லை எனத் தெரியவருகிறது.

கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டவர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்கும்படி கண்காணிப்பாளர்களைச் சிபார்சு செய்த பொது அமைப்புகள் அந்த அமைப்பிடம் கடந்த ஒரு மாதமாகக் கொடுப்பனவுகளை வழங்குமாறு கோரிக்கை விட்டிருந்தும் கூட கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை.

இவ்விடயம் குறித்து யாழ்ப்பாண மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின இணையம் பவ்ரல் அமைப்பின் தலைவர் கிஸ்லி ரொட்றிகோவுககு அவசரகடிதம் ஒன்றினை நேற்று அனுப்பிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (உ-16)



சுண்டுக்குளி மகளிர் கல்லூரியின் 108வது ஆண்டு விழாவான கடந்த ஜனவரி மாதம் 14 ஆம் திகதி அன்று, சர்வதேச கணனி வலையமைப்பில் இணையத்தளமொன்று அமைத்துக்கொள்ளப்பட்டது.

# இன்று ஒரு தகவல்

## வாழ்வின் இயல்புகள்

கிரேக்க தேசத்தில் ஒரு இராஜா இருந்தார். ஒருமாதிரியான இராஜா. பிடிவாத குணம், பைத்தியக்காரத்தனம இரண்டுமே அவரிடம் உண்டு. அந்த மன்னரிடம் ஓர் அழகிய கட்டில். தங்கத்தால் செய்தது அந்தக் கட்டில். விலை உயர்ந்த கட்டில் அது. விலை உயர்ந்த வைரமெல்லாம் அதில் பதித்து வைத்திருந்தார்கள். அதில் மரமே கிடையாது. எல்லாம் தங்கம், வைரம், வைடூரியம். அவ்வளவு விலை உயர்ந்த கட்டில் எங்கேயும் கிடைக்காது. அப்படிப்பட்ட அபூர்வமான கட்டில்.

அந்த ராஜா தனக்கென்று சில கொள்கைகளை வைத்திருந்தார். அரண்மனைக்கு யாராவது முக்கியமான விருந்தினர்கள் வந்தால் அவர்களை அந்தக் கட்டிலில் படுக்க வைப்பார். ஆனால் ஒரு விஷயம். வரும் விருந்தினரின் உயரம் அந்தக் கட்டிலின் நீளத்திற்குச் சரியாக இருக்க வேண்டும். படுத்தால் கூட குறைவாக இருக்கக்கூடாது. அப்படி ஒரு ஒழுங்கு முறையை அவர் எதிர்பார்ப்பவர். யாராவது ஒரு விருந தினர் வந்தால் அன்றிரவே அந்தக் கட்டிலில் படுக்க அனுமதி கொடுப்பார். வருபவர் அந்தக் கட்டிலைவிட நீளமாக இருந்தால் கட்டிலுக்கேற்றமாதிரிக் காலை வெட்டிவிடச் சொல்லுவார்.

ஏனென்றால் அந்தக் கட்டில் விலை உயர்ந்தது. அதைமாற்ற முடியாது. அதனால் கட்டிலுக்குத் தகுந்தது போல் ஆளை மாற்றிவிடுவார். அங்கே கட்டில் தான் முக்கியம். மனிதன் முக்கியம் இல்லை. அப்படித் தான் பல சமயங்களில் நமக்கு வாழ்வு முக்கியமாகத் தெரிவதில்லை. பொதுவாக ஒரு அளவை வைத்துத் தான் கட்டில் தயாரிக்க முடியும்.

ஒரு சராசரி மனிதனின் அளவு அது. சராசரி என்பது உதாரணமாக பத்துப் பேரின் உயரத்தைக் கூட்டி பத்தினால் வகுத்து வரும் எண் கணக்கின் ஒரு கற்பனை வடிவம் அது. அந்த வகையில்தான் அந்தக் கட்டில் செய்யப்பட்டிருக்கின்றது. ஆனால் சராசரி உயரமுள்ள மனிதன் என்பது கணக்கில் வேண்டுமானால் இருக்கலாம். நடைமுறையில் இருக்க முடியாது. அது கணக்கில் ஏற்பட்ட கற்பனை அளவு. அந்தக் கற்பனை அளவுக்கு நூறு வீதம் சரியாக ஒரு விருந்தாளி வரவேண்டும் என்று எதிர்பார்ப்பது சரியாக இருக்குமா?

அந்தக் கட்டிலைவிட நீளம் குறைவாக அதாவது உயரம் குறைவான ஒரு ஆசாமி வந்துவிட்டார் என்று வைத்துக்கொள்ளுங்கள். அப்போதும் அந்த இராஜா சும்மா இருக்கமாட்டார். அதற்கென்று அரண்மனையில் சில பலசாலிகளை வைத்தீருக்கிறார். அவர்களைக் கூப்பிட்டு விருந்தாளியைக் காட்டிவிடுவார். தலைப் பக்கம் நான்கு பேர் கால்பக்கம் நான்கு பேர் அவரைப் பிடித்துப் பலம் கொண்ட மட்டும் இழுக்கச் சொல்வார். கட்டில் அளவுக்கு சரியாகப் பொருந்தும்படி நீட்டச் சொல்வார். உடல் என்ன கம்பயா தட்டி நீட்டுவதற்கு வரும் விருந்தாளி நல்ல முறையில் படுத்து சந் தோசப்படவேண்டும் என்றுதான் அந்த இராஜா நினைக் கிறார். ஆனால் கட்டிலுக்குத் தகுந்த மாதிரி அவர் நீளம் இருக்கவேண்டும் என்று நினைப்பதால் எவ்வளவு இடைஞ்சல். இது அரசனின் தவறல்ல. ஒழுங்கு முறையின் தவறு என்கிறார் ஒரு பெரியவர்.

வாழ்க்கையை நெறிப்படுத்துவது என்பது வேறு. ஒழுங்குமுறையைத் திணிக்கிறேன் என்று கூறிவிட்டு பலபேர் வாழ்வையே இழந்து விடுகின்றனர். வாழ்வின் இயல்பு ஆனந்தம், மகிழ்ச்சி. அந்த மகிழ்வை அடையவேண்டுமென்றால் திறந்த மனதுடன் செயற்பட வேண்டும். இது தெரியாததனால் நம்மில் பலபேர் வாழ்வின் முக்கியமான சில பகுதிகளை இழந்து விடுகிறோம்.

நம்மில் சில பேர் வேறுமாதிரி. ஒரு ஆஸ்பத்திரியில் அறுவைச் சிகிச்சை நடந்து முடிந்த பின்னர்தான் தாதி அவசரமாக ஓடிவந்து சொன்னார் "டாக்டர் இந்த நோயாளிக்கு காலில்தான் கட்டி. ஆனால் நீங்கள் மூளையில் கட்டியென்று நினைத்து தலையில் அறுவைச் சிகிச்சை செய்துவிட்டீர்கள். மூளையில் அறுவைச் சிகிச்சை செய்யவேண்டிய நோயாளி 15ஆம் நம்பர் கட்டிலில் இருக்கிறார்" என்றார்.


டாக்டர் பார்த்தார். "பரவாயில்லை. அதனால் என்ன கட்டிலை மாற்றிவிட்டால் சரி. இவரைக் கொண்டுபோய் 15ஆம் இலக்க கட்டிலில் போட்டுவிடு சரியாகிவிடும்" என்றார்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# புலிகளே தமிழரின் ஏக பிரதிநிதிகள் புரிந்து செயற்படுகின்றது புதிய அரசு

## கதிர்காமர் ஆங்கிலப் பத்திரிகைக்குப் பேட்டி

(கொழும்பு)



தமிழீழ விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்பதை புதிய அரசு உணர்ந்து வருவதாக சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கில நாளிதழ் ஒன்றிற்கு வழங்கிய செவ்வி ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து லக்ஷ்மன் கதிர்காமர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழீழ விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்பதை எமது அரசு உணர்ந்து வருகின்றது. தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகள் எதிர்வரும் ஜூன் மாத முற்பகுதியில் மீண்டும் ஆரம்பமாகவுள்ளன.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்ற போது அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகளுமே பேச்சுவார்த்தை மேசையில் முக்கிய இரு தரப்பினராகப் பங்கேற்றிருந்தனர். இனி வரும் பேச்சுவார்த்தைகளின் போதும், பேச்சுவார்த்தை மேசையின் முக்கிய இரு தரப்பினராக விடுதலைப் புலிகளும், அரசாங்க தரப்புமே விளங்கவுள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் விரைவில் இடம்பெறவுள்ள பேச்சுவார்த்தைகளின் போது வடக்கு, கிழக்கின் புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளை உடனடியாக செயற்படுத்துவது தொடர்பாகவே முதலில் பேச்சுவார்த்தைகள் இடம் பெறவுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(உ)

# இராசி பலன்

**02.05.2004**

**(சித்திரை 20, ஞாயிற்றுக்கிழமை)**
**துவாதசி முற்பகல் - 7.35 மணி வரை**
**அத்தம் பின்னிரவு 3.19ம ணி வரை**
**இராகுகாலம் 4.26 - 5.56 மணி வரை**
**சுபநேரம் 8.56 - 10.26 மணி வரை**
**அமிர்த சித்தம், பிரதோஷ விரதம்.**

**மேடம்**
எடுத்த காரியம் கைகூடும், புதிய திருப்பம், மகிழ்ச்சி, தேக ஆரோக்கியம்.

**இடபம்**
முயற்சி கைகூடும், குடும்பக்கவலை, உடல்நலக் குறைவு, தொழில் கஷ்டம்.

**மிதுனம்**
வாகன நன்மை, உடல் சோர்வு, எடுத்த காரியம் தாமதம், போசன சுகம்.

**கடகம்**
வாக்குமேன்மை, தனலாபம், தடைப்பட்ட காரியம் கைகூடும், உறவினர் உதவி.

**சிங்கம்**
கற்பனை மிகுதி, வீண்வார்த்தை, தன விரயம், காரிய தாமதம்.

**கன்னி**
புதிய முயற்சி, விருந்துபசாரம், நண்பர்கள் சந்திப்பு, பிரயாணம்.

**துலாம்**
சயனசுகக் குறைவு, எதிர்பாராத நன்மை, உறவினர் மனஸ்தாபம், பொருள்விரயம்.

**விருச்சிகம்**
சகோதரர் உதவி, தொழில் நன்மை, சத்துரு ஜெயம், நல்ல முயற்சி.

**தனுசு**
நண்பர்கள் உதவி, பிரயாண நன்மை, காரிய அனுகூலம், உற்சாகம்.

**மகரம்**
எதிர்பாராத செலவு, சரீர பிரயாசை, காரிய தாமதம், தந்தைவழி உறவு.

**கும்பம்**
தொழிலில் ஆர்வம், வாகனபயம், வீண் பிரச்சினை, உடல் வியாதி.

**மீனம்**
குடும்ப சுகம், பிரயாணம், கௌரவம், விருந்துபசாரம்.

**(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)**

*வளவன்*

# தொழிலாளரின் உரிமைகளை பேண உரிய நடவடிக்கை

## ஜனாதிபதி மேதினச் செய்தி

(கொழும்பு)



அனைத்துத் தொழிலாளர்களினதும் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் பலப்படுத்துவதற்கும் தொழிற்சாலைகள் சட்டமும் கைத்தொழில பிணக்குகள் சட்டமும் திருத்தியமைக்கப்பட வேண்டும் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

மேதினத்தை ஒட்டி விடுத்துள்ள செய்திக் குறிப்பொன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அந்தச் செய்திக் குறிப்பில் ஜனாதிபதி மேலும் தெரிவித்திருப்பதாவது,

சம்பள நிர்வாக சபைகளை ஒழித்துவிட வேண்டும் என்ற முன்னைய அரசாங்கத்தின் தீர்மானத்தை இடைநிறுத்திவிட்டு புதிய சம்பள நிர்வாக சபைகளை அமைக்க வேண்டும்.

அத்துடன், வறுமை காரணமாக வெளிநாடுகளில் வேலை பார்த்து வரும் பெணகள் அங்கு சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருவதால் அவர்களுக்கு உள்நாட்டில் வேலைவாய்ப்பை பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இவ்விடயங்கள் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுடன் நான் பேசவுள்ளேன்.

இவை தவிர, இனங்களுக்கிடையே சமத்துவத்தை ஏற்படுத்துவதன் மூலம் கௌரவமான சமாதானம் ஒன்றைக் கொண்டுவர முடியும்.

இதன் முதல் கட்டமாக அரசியல் யாப்பு திருத்தி அமைக்கப்படவுள்ளது என்று ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

(உ-60,10)

# பொருளாதார மறுமலர்ச்சிக்கு புதிய அரசு வித்திடும்

## பிரதமர் மேதினச் செய்தி

(கொழும்பு)



ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம், தொழிலாளர் வகுப்பிரன ஆதரவை அடிப்படையாகக் கொண்ட மக்கள் பொருளாதாரத் திட்டம் ஒன்றின் மூலம் நாட்டில் சமூகப் பொருளாதார மறுமலர்சசியை ஏற்படுத்து வதற்கு உறுதி பூணடுள்ளது எனப பிரதமர் மகிந்த ராஜபக்ஷ விடுத் துள்ள மேதினச் செய்தியில் தெரி விக்கப் பட்டுள்ளது.

புதிய அரசாங் கத்தின் இந்த முயற சிகள் தொழிலாளர் வர்க்கத்தின் பூரண ஆதரவுடன் வெற்றியடையும் எனவும்,

நாட்டின் அபிவிருத்திக்காக அர்ப்பணிப்புடன் பாடுபடும் அனைத்து தொழிலாளர்களும் நாட்டின் எதிர்கால நலனுக்காக மேலும் உன்னதமான சேவையை செய்வதற்கான பலத்தையும் துணிச்சலையும் பெறுவார்கள் என்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ விடுத்துள்ள மேதினச் செய்தியில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளது.

(உ-60,10)

# கூட்டம்

(புத்தளம்)

முந்தல் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கணமூலை பகுதியில் இரு கட்சிகளின் ஆதரவாளர்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள இழுபறி நிலைக்கு முடிவு காணபதற்கென நேற்று சனிக்கிழமை சமரச உயர் மட்டக் கூட்ட மொன்று கூட்டப்பட்டது. முந்தல் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அஜித் பிரசன்னா தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டம் சுமுகமாக நடைபெற்று முடிந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. (உ-15)

கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்டது அமைச்சு -குறள்

வலம்புரி

## சமாதான முயற்சிக்கான சாதக நிலை உண்டா?

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கான நடவடிக்கையில் நோர்வே அரசு ஈடுபட்டுள்ளது. நடந்து முடிந்த தேர்தலில் ஜனாதிபதி சந்திரிகா குமார துங்கா தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பதவியேற்ற கையோடு, விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களைத் தொடர் வதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு நோர்வே அரசிடம் ஜனாதிபதி சந்திரிகா கோரிக்கை விடுத்திருந்தார்.

அவரின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நோர்வே அரசு மீண்டும் சமாதான முயற்சிகளை ஆரம்பிக்கும பூர்வாங்க வேலைகளில் ஈடுபட்டுள்ளது. ஐக்கிய தேசிய முன்னணியின் ஆட்சியில் நோர்வேயின் துணையுடன் சமாதானப் பேச்சுக்கள் முன்னெடு ககப்பட்ட போதிலும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபத சந்திரிகாவின் ஆதரவு இல்லாது போன மையால் சமாதானப் பேச்சுக்கள் இடைநிறுத் தப்பட்டன.

இந்நிலையில் நடந்து முடிந்த தேர்தல் முடிவு களின் அடிப்படையில் ஜனாதிபதிசந்திரிகா குமாரதுங்கா தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சிப் பொறுப்பை ஏற்றது. நாட்டு மக்களுக்கு வழங்கிய ஆணையின் பிரகாரம் விரும்பியோ விரும்பாமலோ சமாதானப் பேச் சுக்களை ஆரம்பிக்கவேண்டிய தேவை புதிய அரசி ற்கு ஏற்பட்டுள்ளது. இதன் பிரகாரமாகவே நோர்வேயை அழைத்து சமாதான முயற்சிகளைத் தொடர்வதற்கான நடவடிக்கையில் ஈடுபடுமாறு ஜனாதிபதி கேட்டுள்ளார்.

ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் இலங்கைக்கு வருகை தந்துள்ள நோர்வேயின் தூதுக்குழு சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பதற்கான சிலதேவைப்பாடுகள் பற்றி பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுடனும், ஜனாதிபதி சந்திரிகா குமார துங்காவுடனும் ஆலோசனை நடத்தியுள்ளது.

இலங்கை இனப்பிரச்சினையைப் பொறுத்தவரை விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்களை நடத்துவதன் மூலமே தீர்வு காணமுடியும். விடுதலைப் புலிகளை ஓரங்கட்டிவிட்டு சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பதோ அன்றி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதோ நடைமுறைக்குச் சாத்திய மற்றதர்கும். இந்த உண்மையை சிங்கள ஆட்சியா ளர்கள் உணர்ந்துள்ளார்கள் என்பதை நோர் வேக்கு ஜனாதிபதி விடுத்த அழைப்பு உறுதிப் படுத்துகிறது.

எனினும் சமாதானப் பேச்சுக்களைத் தொடர் வதில் இருக்கக்கூடிய தடைகள், இடையூறுகள் பற்றியும் நோக்குவது அவசியமாகும். நடந்து முடிந்த தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கா தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சி வெற்றி பெற்றிருக்குமாயின், விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களைத் தொடர்வதில் எதுவித கஷ்டங்களும் இருக்க நியாயமில்லை.

ஏனெனில் ஐக்கிய தேசியக் கட்சியின் கடந்த ஆட்சியில் விடுதலைப் புலிகளுடன் ஆறு சுற்றுப் பேச்சுக்கள் நடந்தேறியது. ஆறு சுற்றுப் பேச்சுக் களைத் தொடர்ந்து இனப்பிரச்சினையின் ஓர் முக் கிய திருப்புமுனையாக விடுதலைப் புலிகள் தமது தீர்வுத்திட்டத்தை எழுத்துமூலம் முன்வைத்தனர்.

இதுவரை நடைபெற்ற சமாதான முன்னெடுப்பு களில் விடுதலைப்புலிகளால் எழுத்துமூலம் முன் வைக்கப்பட்ட தர்வுத்திட்டம் இதுவேயாகும். இத்தீர்வுத் திட்டத்தை ஐக்கிய தேசிய முன்னணிஅரசு முழுமையாக ஏற்றுக் கொள்ளாத போதிலும், அத் தீர்வுத் திட்டத்திலிருந்து பேச்சுக்களை ஆரம்பிக்கலாம் என அறிவித்திருந்தது. இந்நிலையில் மீண்டும் அதே யரசு வெற்றி பெற்றிருந்தால் சமாதானப் பேச்சுக்களைத் தொடர்வதில் இடையூறுகள் இருக்க முடியாது. ஆனால் புதிய அரசின் சமாதான முயற்சி என்பது புலிகளின் தீர்வுத் திட்டம் - கருணாவின் விவகாரம் என்ற பாறைகளில் முட்டி மோதித் தடைப்படு வதற்கான சாத்தியங்கள் இருக்கவே செய்கின்றன.

# வரட்சியால் பாதிப்புற்ற வன்னி விவசாயிகளுக்கு நட்டஈடு

## வழங்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை

(மன்னார்)

கடும் வரட்சி காரணமாக வவுனியா மாவட்டத்தில் கிட்டத்தட்ட 59 ஆயிரம் ஹெக்டேயர் வயல் நிலமும் 3 ஆயிரத்து 403 ஹெக்டேயர் மேட்டுநிலப் பயிர்ச் செய்கைக்கும் பாதிப்பேற்பட்டது. மன்னார் மாவட்டத்தில் 61 இலட்சத்து 13 ஆயிரத்து 25 ஏக்கர் நிலப்பரப்பு நெற்பயிரும் 3 இலட்சத்து 11 ஆயிரத்து 25 ஏக்கர் மேட்டுநிலப் பயிரும் இதுபோன்று முல்லைத்தீவு மாவட்டத்திலும் பெரும் நிலப்பரப்பு நெற்பயிரும் கிட்டத்தட்ட அதேயளவு மேட்டு நிலப் பயிரும் அழிந்து போயுள்ளன.

போர்ச்சூழல் காரணமாக வன்னிப் பகுதி விவசாயி களுக்கு ஏற்பட்ட துர்அதிர்ஷ்டகரமான பல சம்பவங் களுடன் தற்போது வரட்சி காரணமாக இவர்களுக்கு ஏற் பட்ட பெரும் நஷ்டத்தையும் கவனத்திலெடுத்து நஷ் டத்திற்குச் சமனான இழப்பீட்டை வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

வன்னி மாவட்டத்தின் 2003/2004 பயிர் வரட்சி அழிவு சம்பந்தமாக வன்னி மாவட்ட எம்.பி. செல்வம் அடைக் கலநாதன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு வரைந்துள்ள 26 04.2004 திகதிய கடிதத்தில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அக்கடிதத்தில் மேலும்,

20 வருடங்களுக்கு மேலான போர்ச் சூழல் காரணமாக வன்னி மாவட்ட மக்கள் சொத்திழந்து, வீடிழந்து, இடப் பெயர்வுகளால் அவதியுற்றது தெரிந்த விடயமாகும். வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்கும் ஏற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிற்பாடு ஏற்பட்ட அமைதிச் சூழலைப் பயன்படுத்தி பல வருடங் களாகக் கைவிடப்பட்ட நிலையிலிருந்த வயல் நிலங் களைப் பயன்படுத்தி விவசாயத்தில் ஈடுபட்டனர்.

கைவிடப்பட்ட நிலங்களும் பொய்க்காது நல் விளைச் சலைக் கொடுத்தன. முதல் வருடத்திலேயே பெரு விளைச் சலைக் கண்ட விவசாயிகளும் தம்மைச் சூழ்ந்திருந்த போர் மேகங்கள் காரணமாக தமக்கு ஏற்பட்ட பாரிய இழப்பிற்கு ஓர் அளவாகுதல் ஈடுசெய்யலாம் என மகிழ்வுற்றனர்.

ஆனால் அவர்களது மகிழ்வு நீடிக்கவில்லை. அறுவடை செய்த நெல்லை விற்பனை செய்வதற்கு உரிய ஒழுங் குகள் செய்யப்படாததனால் நெல்லைக் களஞ்சியப் படுத்தக்கூட கட்டடங்கள் அழிவுற்ற நிலையில் மிகவும் அவஸ்தைக்குள்ளாகினர். இவர்களது நலிந்திருந்த நிலையை தனிப்பட்ட வியாபாரிகள் நன்றாகப் பயன் படுத்திக் கொண்டனர். மிகவும் குறைந்த விலையில் வியாபாரிகள் நெல்லை விவசாயிகளிடம் இருந்து கொள் வனவு செய்துகொண்டனர். இதனால் விவசாயிகளுக்குப் பெரும் நஷ்டம் ஏற்பட்டது.

2003/2004 காலபோக செய்கையில் நம்பிக்கையுடன் இறங்கினர். மழை பொய்த்ததால் அது கைகூடாமல் போய்விட்டது. பணம் படைத்தவர்கள் கிணறுகளிலிருந்து நீரை இறைத்துப் பயிர்களைக் காப்பாற்றலாம் எனப் பாடுபட்டனர். நிலத்தடி நீரும் மழையின்மை காரணமாக வற்றிவிட்ட நிலையில் அதுவும் முறையாகக் கைகூட வில்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

## தே.மு.கா.வேட்பாளர் மீது நீதிமன்றில் விசாரணை

(புத்தளம்)

வடமேல் மாகாண சபைத் தேர்தலில் தேசிய முஸ்லிம் காங்கிரஸின் சார்பில் போட்டியிட்ட நஸீர் அகமட் கடந்த வியாழக்கிழமை ஆனமடுவ நீதிமன்றில் ஆஜர்செய்யப் பட்டார்.

தேர்தல் தினத்திற்கு ஓரிரு தினங்களுக்கு முன்னர் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவாளர்களைப் புத்த ளம் நகரில் வைத்துத் தாக்க முற்பட்டதாக இவர்மீது புத்தளம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இம்முறைப்பாட்டையடுத்து நஸீர் அகமட்டை கைது செய்த புத்தளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே. ஆர். ரத்னாயக்க அவரைப் புத்தளம் மாவட்ட நீதவான் அமல் திலகரட்ன முன்னிலையில் ஆஜர்செய்தபோது 5 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதித்ததுடன், எதிர்வரும் நவம்பர் மாதம் 24ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறும் உத்தரவு பிறப்பித்தார்.

அதேவேளை, வீடமைப்பு அதிகார சபையினால் வறிய மக்களுக்கு வழங்கவென விநியோகிக்கப்பட்ட 700 கூரைத் தகடுகளை தமது வீட்டில் வைத்திருந்த புத்தளம் பிரதேச சபைத் தலைவர் எம். கருணாரத்ன மீண்டும் நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டபோது 50 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் 15 இலட்சம் ரூபா சரீரப் பிணையிலும் செல்ல நீதவான் அமல் திலகரத்ன உத்தரவிட்டார்.

(உ-15)

## சுதேச வைத்தியர்களுக்கு ஓய்வூதியம் வழங்க திட்டம்

### அமைச்சர் திஸ்ஸ கரலியத்த

(கொழும்பு)

சுதேச வைத்தியர்களுக்கு ஓய்வூதியத் திட்டம் ஒன்று உடனடியாக அமுல்படுத்தப்படவிருப்பதாக சுதேசவைத்தியத் துறை அமைச்சர் திஸ்ஸ கரல யத்த தெரிவித்துள்ளார்.

தமது அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற இலங்கை சுதந்திர சுதேச வைத்தியர் சங்கத்தின் நிறை வேற்றுக் குழுவினர் முன்நிலையில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவிததார்.

ஆயுள் வேத தொழிலில் ஈடுபட்டிருக்கும் சகல உத்தியோ கத்தர்களுக்கும் பரந்த அளவில் அங்கீகாரம் கிடைக்கும் வகையில் ஆயுர்வேத பாதுகாப்புச் சபை மீண்டும் செயற்பட நடவடிக்கை எடுக்கப்படுமென்று அமைச்சர் அங்கு கூறினார். (த)

### தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

எந்நேரமும் இறைநாமம் மனதிற் குள் உச்சரித்துக்கொண்டே அனை த்து வேலைகளும் செய்வோமா னால் நாம் விரைவில் நம் வாழ்வின் இலட்சியமாகிய இறைநிலையை அடைவோம்.

சுவாமி விவேகானந்தர்

## சீனா நிதி உதவி

(கொழும்பு)

அம்பாந்தோட்டை துறைமுக அபிவித்தித்திட்டம் மற்றும் கொழும்பு கட்டுநாயக்கா ஆகியவற்றுக்கிடையிலான புகையிரத வழி என்பவற்றை புனரமைப்பதற்கு நிதியுதவி அளிக்க சீன அரசு முன்வந்துள்ளது.

இதுதொடர்பில் அண்மையில் துறைமுக மற்றும் கப்பல் தொழில் அமைச்சர் மங்கள சமரவீரவை சந்தித்த இலங்கைக்கான சீனத்தூதுவர் தமது உதவி வழங்கும் திட்டங்கள் குறித்து விளக்கமளித்தார்.

இது இலங்கைக்கும் சீனாவிற்குமான நட்புறவைப் பேணும் விதத்தில் அமைந்துள்ளதாகவும் இதனை இலங்கை ஏற்றுக் கொள்ள வேண்டும் எனவும் சீனத் தூதுவர் மேலும் வேண்டுகோள் விடுத்துள்ளார். (உ-4,60)

## முன்னாள் யாழ். எம்.பிக்கு நீதிமன்றம் அழைப்பாணை

(புத்தளம்)

யாழ்.மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஐ.எம்.இலியாஸை இம்மாதம் 10ஆம் திகதி புத்தளம் மாவட்ட நீதிமன்றில் ஆஜராகுமாறு மாவட்ட நீதவான் அமல் திலகரத்ன உத்தரவு பிறப்பித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை புத்தளம் நீதிமன்றில் சட்டத்தரணி கமர்தீன் மூலமாக சமர்ப்பிக்கப்பட்ட முன்கூட் டிய பிணை மனுவையடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

தேர்தல் தினத்தன்று இடம்பெற்ற வன்முறைச் சம்ப வத்துடன் தொடர்புபட்டுள்ளதாக செயயப்பட்டிருந்த முறைப் பாட்டையடுத்தே டாக்டர் இலியாஸை பொலிஸார் கைது செய்ய முனைந்துள்ளனர்.

அதேவேளை, தான் வீட்டில் இல்லாதபோது, புத்தளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.ஆர்.பி.ரத்னாயக்க தலைமையிலான பொலிஸார் தனது புத்தளம் வீட்டுக்குள் நுழைந்து மனைவியை அச்சுறுத்தியுள்ளதாகவும், இது உரிமையை மீறும் செயலென பொலிஸ் மா அதிபரிடம் டாக்டர் ஐ.எம். இலியாஸ் முறையிட்டுள்ளார்.

பொலிஸாரின் இந்தச் செயல் குறித்து பாரபட்சமற்ற விசாரணைக்கு உத்தரவிடுமாறு பொலிஸ் மா அதிபரைக் கேட்டுள்ளார். (உ-15)

## வரி மன்னிப்பு வழங்கும் நடவடிக்கை நிறுத்தம்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசினால் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட வரி மன்னிப்பு, வரிச் சலுகைகளை வழங்கும் நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்துமாறு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் பணிப்புரை விடுத்துள் ளார்.

உள்நாட்டுத் திணைக்கள ஆணையாளர்கள், பிரதி ஆணையாளர்கள் மற்றும் பிராந்திய அலுவலகங்களின் பிரதி ஆணையாளர்கள் ஆகியோருக்கு கடந்த வெள்ளிக் கிழமை முதல் இதற்கான பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு இறைவரி விசேட ஏற்பாடுகள் சட்டத்தில் விசேட திருத்தங்களைக் கொண்டுவர ஐக்கிய மக்கள் முன்னணி அரசு தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வரு கிறது. இதன் காரணமாகவே இந்த அவசர பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.(உ-61.8)

ஸ்ரீ முருகன் ஸ்தாபனத்தாரின் மற்றுமோர் சேவை
வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளிடமிருந்து
WESTERN UNION | MONEY TRANSFER | வெஸ்டன் யூனியன் | பணப் பரிமாற்றம்
மூலம்
சில நிமிட நேரத்தில் உங்கள் கைகளில் பணம் கிடைக்க
எம்மிடம் நாடுங்கள்
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303 K.K.S. வீதி, யாழ்ப்பாணம்
T.P : 021 222 5392
Fax : 222 3214
E.mail : smskr@eureka.lk
சிவன் கோவில் வீதி, காரைநகர் T.P : 0602212472

# புலிகள் ஏகபிரதிநிதிகள் என்பதில் கதிர்காமர் இரட்டை வேடம்!

## ஹெல உறுமய குற்றச்சாட்டு

(கொழும்பு)

தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் விடுதலைப் புலிகள் என்னும் விடயத்தில் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இரட்டை வேடம் போடுகிறார் என, ஜாதிக ஹெல உறுமய குற்றம் சாட்டியுள்ளது.

கதிர்காமர் இவ்விடயம் தொடர்பாக இரண்டு விதமாகப் பேசி கூறுகிறார். அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் மிகவிரைவில் பேச்சுவார்த்தை ஆரம்பிக்க இருப்பதாக புதுடில்லியில் கதிர்காமர் கூறிய கருத்து, அவர் முன்னர் கூறிவந்த கருத்திற்கு முரணாகவுள்ளது.

புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிக்க முன்னர் சகல அரசியற் கட்சிகளுடனும் கலந்துரையாடுவோம் என்று, ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அது நடைபெற முன்னரே அறிவிப்புக்கள் வெளிவருகின்றன என்று ஹெல உறுமயவின் செயலாளர் குற்றம் சாட்டினார்.

மேலும் விடுதலைப் புலிகளின் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் பேச்சுக்களிற்கு முன் நிபந்தனையாக விதித்த ஏகப்பிரதிநிதித்துவம் பற்றி கதிர்காமர் கூறுவது தமிழரசுக்கட்சியின் ஆதரவைப் பெறுவதற்கே என்று குறிப்பிட்ட ஹெலஉறுமயவின் செயலாளர் விடுதலைப்புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால நிர்வாக யோசனை குறித்து வெளிப்படையாகவே எதிர்ப்புத் தெரிவித்த கதிர்காமர், தற்போது முழுவதுமாக மாறிவிட்டார் என்றும், ஜே.வி.பியினர் இவ்விடயம் குறித்து என்ன நிலைப்பாட்டில் இருக்கின்றனர் என்பதை நேரடியாகக் கேட்கப்போவதாகவும் தெரிவித்துள்ளார். (இ-6)

## கடற் படையினரால் கிளாலிக் கடலில் மீனவர் கைது!

(கிளிநொச்சி)

கிளாலிக் கடல்பரப்பில் கடற்றொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மீனவர் ஒருவர் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் நான்கு மணியளவில் நாகதேவன் துறைக்கு அண்மையில் இடம் பெற்று உள்ளது.

கிளாலியைச் சொந்த முகவரியாகக் கொண்ட எரோனி வின்சன் என்பவரே கைது செய்யப்பட்டவராவார்.

மூன்று படகுகளில் வந்த இலங்கைக் கடற் படையினர் அவரை பிடித்துச் சென்றதுடன், அவர் வைத்திருந்த கடற் தொழில் உபகரணங்களும் கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## 'தமிழ் அலை'க்கு பெயர் மாற்றம்

தமிழீழ விடுதலைப் புலிகளினால் கடந்த ஒரு வருட காலமாக மட்டக்களப்பில் வெளியிடப்பட்டு வநத தமிழ் அலை தினசரிப் பத்திரிகை நேற்றுமுதல் "ஈழநாதம்" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கபபட்டுள்ளது. (வ)

## ஐந்நூறு ரூபா பந்தயத்திற்காக நிர்வாணமாக ஓடிய இளைஞன்

### உரும்பிராயில் பரபரப்பு

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் இளைஞர் ஒருவர் நிர்வாணமாக ஓடியதால் அப்பகுதியில் பெரும் பரபரப்பும் அமளியும் ஏற்பட்டது. இச்சம்பவம் நேறறிரவு 8.30 மணியளவில் இடம பெற்றது. 500ரூபா பந்தயத்திற்காக குறிப்பிட்ட இளைஞன் உரும பிராய் சந்தியிலிருந்து உரும்பிராய் ஒஸ்கா லேன் வரையும் நிர்வாணமாக ஓடிச்சென்று மீண்டும் அங்கிருந்து உரும்பிராய் சந்திக்குச் வந்து பந்தயத்தில் வென்றார்.

குறிப்பிட்ட இளைஞர் நிர்வாணமாகச சென்ற போது ஏனைய இளைஞர்கள் சிலர் அவருக்கு பின்னால் சென்று மோட்டார் சைக்கிள் வெளிச்சத்தை அவர் மீது பாய்ச்சி கூக்குரலிட்டு பெரும் அமளிப்பட்டனர். கூக்குரலிட்டதைக் கேட்டு பதற்றமடைந்து வீதிக்கு வந்த பெருமளவு ஆண்களும் பெண்களும் சம்பவத்தை அவதானித்த பின்னர் வெட்கித் தலை குனிந்து சென்றனர்.

தமிழர்களின் கலாசாரத்தைக் கெடுப்பதற்கென சில இளைஞர்கள் உருவாகி வருவதாக பெரியவர் ஒருவர் வேதனையுடன் கூறினார். இளைஞர்களின் இத்தகைய கட்டுமீறிய அவமானச் செயல்கள் அதிகரிப்பதற்கு மக்கள் கண்டும் காணாததும் போல இருப்பதே காரணம் என்றும் இது தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப் படுவது சமூகக்கட்டுப்பாட்டிற்கு மிகவும் அவசியம் என்றும் அப்பெரியவர் மேலும் கூறினார். (ச)

# தேசத்தை உருவாக்கும் சக்தி தொழிலாளர்களிடமே உண்டு

## மேதின நிகழ்வில் கலைவிழி

(யாழ்ப்பாணம்)

ஒரு தேசத்தை அமைக்க வேண்டுமானால அல்லது உருவாக்க வேண்டுமாக இருந்தால், அந்தத் தேசத்தை உருவாக்கும் மக்கள் கூட்டம் நிச்சயமாகத் தொழிலாளர்களாகத் தான் இருக்கமுடியும்.

இவ்வாறு விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவிழி தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற மேதின நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையிலேயே இவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில்,

தேசத்தைப் படைக்க உழைக்கும் தொழிலாளர்கள் மீது எவ்வித அழுத்தங்களோ, அடக்கு முறைகளோ, அடிமைத்தனங்களோ ஏற்படக் கூடாது.

தொழிலாளர்களின் சக்தியை அதிகரிக்கும் தினமாக இந்நாளை நாம் அனுஷ்டிக்க வேண்டும்.

தொழிலாளர்கள் தேசத்தின் சிற்பிகள். அவர்களின் பலம்தான் தேசத்தையே வளப்படுத்தும் என்றும் கலைவிழி மேலும் தெரிவித்தார். (இ-121)

## ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தொழிலாளரை ஒருபோதும் மறக்காது

### பிரதமர் ராஜபக்ஷ மேதினத்தில் உறுதி

(கொழும்பு)

ஐககிய தேசியக் கட்சி அதிகாரத்தில் இருந்தபோது செயற்பட்டது போன்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தொழிலாளர் வர்க்கத்தை ஒருபோதும் மறக்க மாட்டாது.

இவ்வாறு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நேற்று கொழும்பு நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற மேதினக கூட்டத்தில் உரையாற்றும் போது உறுதியளித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மேதினக் கூட்டம் நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் பிரதமர் மேலும் பேசுகையில்,

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் இருந்தபோது ஒடுக்குமுறைகளையும், பல சுமைகளையும் சுமந்த மக்களுக்கும் நிவாரணம் வழங்குவதில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் கூடிய கரிசனை செலுத்தி வருகிறது.

உரத்தின் விலை குறைக்கப் பட்டுள்ளது. வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அரசாங்க ஊழியர்களின் சம்பள முரண்பாட்டை நீக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் தெரிவித்தார். (இ,121)

வண்ணை வீரமாகாளியம்மன் கோயில்
அஷ்தோத்திர சகஷ்ட சங்காபிஷேகம்
யாழ். வண்ணை வீரமாகாளியம்மன் கோவில் அஷ்தோத்திர சகஷ்ட (ஆயிரத்தெட்டு சங்காபிசேகம்)
கருமாரம்பம் :- இன்று (02-05-2004) காலை 8.00 மணி.
தொடர்ந்து சங்கு பூஜை, விசேட திரவிய ஹோமம், பூரண ஆகுதி, 'நண்பகல் 12.00 மணிக்கு சங்காபிசேகம் நடைபெறும்.
மாலை 5 மணிக்கு வசந்த மண்டப பூஜைகள் நடைபெற்று அம்பாள் பூந்தண்டிகையில் வீதிவலம் வருவாள். அடியார்கள் அம்பாளின் அருள் பெற்று உய்யும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.
C - 162
விழா உபயகாரர்கள்




## இறுதிக் கிரியைகள்

நுவரேலியா கந்தப்பொலவில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்த இருவரினதும் இறுதிக்கிரியைகள நேற்று மாலை பலத்த பாதுகாப்புடன் நடைபெற்றது.

நோனா தோட்டத்தைச் சேர்ந்த வீராச்சாமி ஜெயராம், மற்றும் பார்க் தோட்டத்தைச சேர்ந்த அழகன் விமலநாதன் ஆகியோரின் இறுதிக் கிரியைகளே அவர்களது தோட்டங்களில் உள்ள மயானங்களில் நடைபெற்றன.

2 (ச-121)

## ஊழல் ...

படுத்தப்பட உள்ளது.

25 ஆயிரம் பட்டதாரிகளுக்கும் 30 ஆயிரம் பட்டதாரி அல்லாதவர்களுக்கும் வேலை வாய்ப்புக்களை உருவாக்குவது பற்றியும், தற்போது உள்ள பதவி வெற்றிடங்கள் பற்றியும் திறைசேரிக்கு அறிவிக்குமாறும் ஜனாதிபதி அமைச்சுச் செயலாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார். (இ.6)

## ஜனாதிபதி ...

கிச் சூட்டு சம்பவத்துடன் தொடர்புடைய நபர்கள் யார் எனக் கண்டு பிடித்து அவர்களுக்கெதிராக கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும என்று ஜனாதிபதி, பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளார் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.05.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.